1750

M. 1803. JANUARY 1928 Vol. V

லக்ஷ்ம

OFFICE OF THE
20
MA

சொந்தக்காரர்கள்:
கே.எஸ். முத்தையா & கோ., சென்

வருட சந்தா உள்நாடு ரூ. 2

மெரிக்கன் சில்க் - - - - அங்கவஸ்திரம்

ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி
து உபயோகிக்கலாம். வண்ணனுக்கும் போட்டு
செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்
யது. 5 முள நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

க்கவில்லையே ! என்று வருந்தவேண்டாம்

வ 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செல
ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்
டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய்
கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும்
கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு
வதால் முந்திக் கொள்ளுங்கள் !

ாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

த்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த
கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதி
வதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம்.
லரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன்

ல் ஷர்ட் 1-க்கு விலை	ரூ.	2—0—0.
காக்கி ஷர்ட் விலை	ரூ.	2—4—0.
இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ.	2—4—0.
4 அமெரிக்கன் டோரியா	ரூ.	2—4—0.
5 உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ.	3—8—0.

ல். முத்தையா கம்பெனி,

சென்னை.

தேக ஆரோக்யத்தைக் – –

– – – கவனியுங்கள்!

குளிர்காலத்தில் தேக ஆரோக்யத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகிப்புக்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர்காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் வந்து குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை உடனே அனுப்பிவிடுங்கள்!

நெ. 1 ஜெர்மன் கம்பிக்கரைப் போர்வை	1க்கு	9-8-0
நெ. 2 பாரிஸ் பூக்கரைப் போர்வை	1க்கு	10-8-0
நெ. 3 ஷை உசத்தி பெரிய சயிஸ்	1க்கு	16-0-0
நெ. 4 காஷ்மீர் கைநெசவு போர்வை	1க்கு	12-0-0
நெ. 5 ஜெர்மன் மேகவர்ணப் போர்வை உசத்தி	1க்கு	15-0-0

K. S. Muthiah & Co.,

EXPORT DEPT.

Post Box 99, :: :: MADRAS.

OFFICE OF THE REGIST
20MAR19
MADRA

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

இரகசிய புஸ்தகம் தயாராகி விட்டது!

இல்வாழ்க்கையின் - - -

- - - இரகசியங்கள்

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

அழகான பயிண்டு. நேர்த்தியான அச்சு.

விலை ரூபா **2—0—0.**

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

துறவிகளின் கதியென்ன?
இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
இல்லறத்திலிருந்து மோக்ஷ மடைவ தெப்படி?
பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
நாணம் எப்படி உண்டாயிற்று?
நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக்கூடியவள்.
நாம் ஏன் உடைதரிக்க வேண்டும்?
நிர்வாணமாயிருப்பதின் தத்துவ மென்ன?

ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?

காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.

சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?

தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?

ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?

அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?

P. T. O

பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.

சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.

ஸ்திரீ புருஷர்களின் மர்ம அங்கங்களின் அமைப்பும் அவைகளின் நேர்மையான உபயோகமும்.

ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?

சங்கம காலத்தில் கடிப்பது, கிள்ளுவது, தலைமயிரைப் பிடித்திழுப்பது இன்னும் பல தொழில்களால் அதிகமான இன்பம் பெறல்.

மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.

கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்.

சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரக்ஷிக்கும் சிரமம்.

முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.

ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.

புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்ததாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக் கொள்ளுவதெப்படி?

அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள், சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனு, துருக்கி முதலிய விடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுகொலை அநியாயம்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசிய விஷங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

வாஸன் புஸ்தகசாலை,

தபால் பெட்டி 119,

97, அண்ணுபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

இனும் ! இனும் !!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட

Self filling பௌண்டன் பேனு இனும்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லிய படி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரு. **4-12-0.**

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின்பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரு. **4—8—0.**
தபால் செலவு **0—8—0.**

தி பான்ஸி வாட்சு அவுஸ். 15, A பீட், ஜி. டி. மதராஸ்.

நல்ல சமயம்! வாங்கத் தவறாதீர்கள்!

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரு. **3—0—0.**

பாரீஸ் எம்போரியம்,
ஜி. டி. மதராஸ்.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹூ தைமீ 1928 ஜனவரிமீ	இதழ் 6.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 259
2.	தமிழ்	... 260
3.	மதமும் மாதரும்	... 261
4.	உருத்திர சூக்தம்	... 269
5.	மதுசாரம்	... 274
6.	கண்ணப்பநாயனர் சரிதை ...	... 281
7.	நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன்	... 285
8.	அஷ்டாவதானி	... 294
9.	கணிதவிநோதம்	... 300

600 008

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினல், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAR 1928
MADRAS

எனக்குன் கடைக்கண்ணருள் வாரி
யின்றளி யின்றருளில்

உனக்கும் புகழுண்டுலகிற்கு
நன்மையுண்டுன் கணவன்

றனக்குங் களியுண்டு சத்தியமே
யொன் சொற்றள்ளிவிடேல்

கணக்குந் துணைமுலையோ திமம்
போலுங் கமலமின்னே.

3L
O211M28LA
N28.56.

தமிழ்

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
   இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
   இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு
நாமமது தமிழரென கொண்டிங்கு
   வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
   பரவும் வகை செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
   வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
   வெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
   வாழ்கின்றோம் ; ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
   தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
   மொழியிற் பெயர்த்தல் வேணடும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
   மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
   சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
   அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
   வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
   கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
   விழிபெற்றுப் பதவி கொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
   இங்கமரர் சிறப்புக் கண்டார்.

—பாரதி.

மதமும் மாதரும்

ஸ்ரீமதி ப. கனக ரத்தினம் B.A., L.T., B. S. C. (London).

மதம் அல்லது மார்க்க மென்றால் கடவுளை நோக்கிச் செல்லும் வழி என்பது நம் யாவருக்குந் தெரியும். கடவுள் என்பவர் யார், அவரை நாம் ஏன் வணங்க வேண்டும்? மத விஷயமாய் மனிதர் கொண்டாடும் கொள்கைகளும் எண்ணங்களும், பொய்யானவை என்று ஆக்ஷேபிப்பவர்கள் வெகு சிலர். உலகத்திலுள்ள பெரும்பான்மையோரும் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை யுள்ளவர்களும், கடவுளை அடைவ்தே மானிட ஜீவியத்தின் முக்கிய நோக்கம் என்ற எண்ணங் கொண்டவர்களுமாயிருக்கிறார்கள். ஆகையால் கடவுளைப் பற்றியும் மத விஷயத்தைப் பற்றியும் சந்தேகமில்லாத நாம் இம்மேன்மையான விஷயத்தைப் பற்றி எப்போதும் ஆராய்ச்சி செய்து கொண்டு வருவது மிகவும் அவசியமானதே. இவ்வாராய்ச்சியை வெவ்வேறு விதமாய் நாம் பகுக்கலாம். நம் முன்னோர்கள் மத விஷயமாய் என்ன செய்திருக்கிறார்கள்? தற்காலத்தில் அவ்விஷயம் எப்படி யிருக்கிறது? இனிமேல் நாம் செய்ய வேண்டிய கடமை என்ப தொன்று. அதில் பெண்களுக்குள்ள உரிமையும் சம்பந்தமும் இன்ன தென்பதைப் பற்றியே நாம் ஆராய்வோம்.

பொதுவாய்ப் பார்ப்போமானால் பெண்களுக்கே ஆண்களைப் பார்க்கிலும் மத விஷயத்தைப் பற்றி அதிக ஆசையும் உற்சாகமு முண்டென்று யாரும் ஒத்துக் கொள்ளுவார்கள். ஆண்களும் பெண்களும் மக்களே. ஆயினும் தன்மையில் வேறுபட்டவர்கள். சிங்கத்திற்கும் பசுவுக்குமுள்ள வித்தியாசம் எப்பேற்பட்டதோ அப்பேற்பட்ட வித்தியாசம் ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையில் உண்டு என்று பொதுவாய்ச் சொல்லலாம். சிங்கம் வல்லமை வாய்ந்தது. பசு சாந்த குணமுடையது. இவ்விரண்டு தன்மையிலும் சாந்த குணமே கடவுளை அறிவதற்கோர் சிறந்த துணையாகும். ஆயினும் சரித்திரத்தைப் பார்த்தால் இதற்கு அத்தாக்ஷியில்லை யென்று யாரேனும் சொல்லக் கூடும். சிவ பக்தர்களை யெடுத்துப் பார்த்தாலும் ஆடவர்கள் அநேகர். அம்மை

யார் சிலரே. உலகம் மிகக் கேடான நிலைமையில் கிடந்த காலங்களில் மத வெழுச்சியை யுண்டாக்கும்படி உலகில் உதித்த பெரியோர்களும் ஆண்களே. அப்படி யிருந்தும், பெண்களே ஆண்களிலும் மதவுணர்ச்சி யிற் சிறந்தவர்கள் என்று நாம் சந்தேக மின்றிக் கூறலாம். பெண்களின் நிலைமை பொதுவாய் எக்காலத்திலுமே கேடா யிருந்தது பற்றியே அவர்கள் பெரும் பதவி யடையவும் உலகப் பிரசித்தி பெறவும் கூடவில்லைபோலும். பெருங் கீர்த்தி யடையா விடினும் சமய விஷயங்களில் ஊக்கங் காட்டியும் முன் மாதிரியான வாழ்க்கை நடத்தியும் வந்திருக்கிறார்கள். அவ் விஷயத்தைக் குறித்து நாம் இப்போது சற்று ஆராய்வோம்.

பூர்வீக காலத்தில் ஆரியர் நமது நாட்டிற்கு வந்தபோது பெண்களின் நிலைமை மேன்மையாகவே இருந்ததாம். கடவுளுக்குப் பூஜை செய்யுஞ் சமயத்தில் பெண்களும் ஆண்களுடன் சரிசமமாய் நின்று ஆண்கள் பூஜையில் ஏதேனும் தப்பிதஞ் செய்தால் அதைத் திருத்திக் காட்டுவார்களாம். வேதங்களிலுள்ள பாட்டுகளில் அநேகம் பெண்கள் பாடிய பாட்டே யென்றும் சொல்லுகிறார்கள். காலஞ் செல்லவே பெண்கள் இந்தச் சமநிலையை இழந்து, சாஸ்திரங்களைப் படிக்கும் உரிமையையும், கல்வியறிவையும், பாட்டுக்களைப் பாடும் திறமையையும் இழந்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். சமநிலைமை ஒழிந்து போயிருந்தும், பெண்கள் மத விஷயங்களில் எவ்வளவோ வைராக்யங் கொண்டிருந்தார்கள். எவ்வளவு அரும் பெருங்கார்யங்களைச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்க, அது ஓர் பெரிய அற்புதமாகவே தோன்றுகிறது.

புத்தர் மனைவி.

புத்த மதத்தை எடுத்துப் பார்த்தால் புத்தருடைய மனைவி இளம் பிராயமுள்ளவளாயும் அதிக அநுபவம் இல்லாதவளாயு மிருந்தும், புத்தர் தன்னை விட்டுப் பிரிந்து, மானிட ஜீவியத்தின் நோக்கம் என்ன, பிறப்பென் றிருந்தால் இறப்பும் அதன் கூடச் சேர்ந்து வருதல் அவசியமோ, உண்மையான சந்தோஷமும் சமாதானமும் மனிதன் எப்படி அடையக் கூடும் என்று இக்கார்யங்களைக் குறித்துத் தியானம் செய்து உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டு மென்று காட்டிற்குப் போன போது, அதன் காரணமும் விசேஷமும் இன்ன தென்றறியா திருந்தும், புத்தர் ஞானத்தை யடைந்து வீடு திரும்பி வந்து, தான் புதிதாய்க் கண்டு பிடித்த ஞானத்தை உபதேசஞ் செய்த போது அதின் உண்மையை

உணர்ந்து, புத்தர் தன் கணவரென்பதை மறந்து, அவரைத் தெய்வமாகக் கருதி அவருக்கு சிஷ்யப் பெண் ஆனாள்.

சங்கமித்தா.

அவளுக்குப் பின் அசோக மஹாராஜாவின் புத்திரியாகிய சங்கமித்தா என்பவர் தன் தகப்பனார் புத்த மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்று பிரயத்தனப்பட்டபோது தானும் அதில் சேர்ந்து ஊழியஞ் செய்ய வேண்டுமென்ற ஆசை மிகுந்து, தூர தேசம் போகிறோமே என்ற அச்சமுமில்லாமல், காடுகளையும் மலைகளையும். நதிகளையும், (நம் காலத்தைப் போல் இருப்புப் பாதை முதலிய வசதியில்லாத அக்காலத்தில்) மன தைர்யத்துடன் கடந்துபோய் இலங்கையைக் கடைசியில் அடைந்து அங்கே புத்த மதத்தை ஸ்தாபித்தார். அம்மதமே இந் நாள்வரையும், இலங்கையிலுள்ள சிங்கள ஜாதியாருள் ஊன்றி நிற்கின்றது.

திலகவதியார்.

புத்த மதத்தினரை விட்டு சிவ பக்தர்களை நோக்கின், அம்மதத்தில் எத்தனையோ அருமையான அம்மையார்கள் தெய்வ பக்தியில் விளங்கி நின்றார்களென்று பார்க்கிறோம். மத வைராக்கியங் கொண்டவர்களில் திலகவதியம்மையாரையும் மங்கையர்க்கரசியாரையுஞ் சிறந்த உதாரணங்களாகக் கொள்ளலாம். திலகவதியம்மையார் சிவமதமே சமண மதத்திலும் சிறந்ததென்ற எண்ணங்கொண்டவர். தனது அருமைத்தம்பியாராகிய மருணீக்கியார் சிவ மதத்தை விட்டு சமணமதமே சிறந்த மதமென்று அதைத் தழுவிய போது மிகுந்த மனக் கிலேச முற்று, தம்பியார் மீண்டும் ஒளி நெறியாகிய சிவ நெறிக்குள் வரவேண்டு மென்று சிவபிரானை நோக்கிப் பிரார்த்தித்து, அவர் திருவருளால் தன் தம்பியார் சிவ மதத்தைத் திரும்பவும் அடையுமாறு செய்து மகிழ்வுற்றாள். மற்ற விஷயங்களிலும் அவருடைய ஜீவியம் முன் மாதிரியாகவே யிருக்கிறது. தன்னைப் பெற்ற தந்தை தாயையும் தான் மணம் புரியக் கருதியிருந்த கணவனையும் ஒருவர் பின் ஒருவராய் விரைவில் இழக்க அவள் தன் சிந்தையை உலக காரியங்களிற் செலுத்தாமல் கடவுள் தொண்டிலும் கோயிற் பணியிலும் செலுத்தினாள்.

மங்கையர்க் கரசியார்.

மங்கையர்க் கரசியார் திலகவதியாரைப்போலவே சிவ மதம் நிலை குலைந்து போயிருக்கும் சமயத்தில் அதற்கு எதிராய் நின்ற சமணமதத்தை யழித்து சிவ மதத் துக்குப் புத்துயிரைக் கொடுத்தாள். மதுரைமா நகரில் அவளுடைய கணவன் சிறப்பாய் ஆண்டு கொண்டு வந்த காலத்தில்

ஏதோ காரணம் பற்றி ஜனங்கள் யாவருக்கும் அரசன் முதற் பிச்சைக்காரன் வரையில் சிவ மததததில் வெறுப்பும் சமண மதத்தில் விருப்பு முண்டாயிற்று. மங்கையர்க்கரசியாருக்கும் அவருடைய மந்திரிக்கும் மாத்திரமே சிவ பக்தியில் ஆசை யிருந்தது. நாடெல்லாம் சமணமாயிருந்தது. அவருடைய தபோ பலத்தினால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் மதுரை நகரை அடுத்திருக்கிறதை அவர் அறிந்து, அவரிடம் தன் மந்திரி குலச்சிறையாரை அனுப்பி, அவர் பின்; தானும் அவரை வரவேற்று அவருதவி கொண்டு சமணருடைய தீச் செயல்களை அழித்து தன் கணவனையும் அவருடன் நகரம் முழுவதையும் சிவ மதத்திற்குத் திருப்பினாள். அவள் கடவுளிடம் வைத்திருந்த விஸ்வாசமும், அவளுடைய ஞானமும் சாமர்த்தியமும், அவள் தான் கொண்டாடும் மததநிற் காட்டிய வைராக்யமும் மிகவும் புகழத்தக்கதே.

காரைக்கா லம்மையார்.

காரைக்கா லம்மையார் சரித்திரமும் தெரிந்ததே. குழந்தை தன் தாயினிடம் எப்படி அச்சமின்றித் தனக்கு வேண்டியதைக் கேட்டுவாங்கிக் கொள்ளுகிறதோ அவ்விதமே இவ் வம்மையாரும் கடவுளின் பக்தியின் மிகுதியால் கடவுள் தனக்கு வேண்டியதை மறுக்க மாட்டார் என்ற முழு நம்பிக்கையுடன் இருமுறை அவரிடம் தேவாமிர்தம் போல் மாங்கனியைப் பெற்றாள். அவள் தெய்வமே என்று அவள் கணவன் உணர்ந்து அவள் தன் மனைவி என்கிற எண்ணததை ஒழித்து அவளை வணங்கி நின்றது அதிசயமல்ல. கணவன் மனம் மாறுபட அவள் அதற் கேற்கத் தன்னுருவும் மாறுபட வேண்டுமென்று சிவபிரானிடங் கேட்டு அதைப் பெற்றுக் கொண்டு தன் ஜீவியம் முழுவதையும் கடவுள் தொண்டிற் கென்றேதத்தஞ் செய்து கடவுள் மீது பாடல்களைப்பாடி சிவபிரான் தாமே அவளைப் பார்தது "அம்மையே" என்று கூப்பிடும் பேறையும் பெற்று, அவரடியின் கீழ் நின்று எப்போதும் அவரைத் துதிக்கும் பெருமையையும் பெற்றாள், திருமால் அடியார்களில் ஆண்டாள் தெய்வமாக விளங்குகிறாள்.

மணிமேகலை.

மணிமேகலையாருடைய சரித்திரமும் தெரிந்ததே. தன் தாய் மாதவி இஷ்டப்படியே அவள் இல்லற வாழ்க்கையில் புகாது, தன்னை மீண்டும் மீண்டும் அதில் ஆழ்த்த முயன்ற இளவரசனைத தோல்வி யடையச் செய்து தவநெறியையே பின்பற்றிக் கொண்டிருந்தாள். மணிமேகலை தேவதையின் அருளால் புத்தர் பாதத்தை வணங்கும் சிலாக்கியத்தையும், மூன்று சிறந்த வரங்களையும் பெற்றுப் பிக்சைக்கார வேடம் பூண்டு

தான் அடைந்த வரங்களைப் பிறர் நலத்திற் கென்று உபயோகித்துத் தன் சொந்த ஊராகிய காவிரிப்பூம் பட்டணத்தில் சிறைக்கோட்டையை அறக் கோட்டை யாக்கி வறுமை பசி யென்பதை நகரினின்று முற்றிலும் நீக்கி, இன்னும் மற்ற இடங்களுக்கும் போய் அங்கும் இவ் விதமான புண்ணிய கார்யங்களை யெல்லாம் செய்தாள். இத்தகை அரிய மாதர்களெல்லோரைப் பற்றியும் சொல்லப் போனால் விரியும். தற்காலத்தில் பெண்கள் மதவிஷயமாய் என்ன செய்திருக்கிறார்க ளென்று இனிப் பார்ப்போம்.

தற்கால நிலைமை.

பழைய காலத்துப் பெண்களைப் பற்றி நாம் எவ்விதம் அடுக்கடுக் காய்ச் சொல்லக் கூடுமோ அவ்விதம் இக்காலத்துப் பெண்களைப் பற் றிச் சொல்ல முடியாதென்று உடனே விளங்குகிறது. மதவிஷயத் திற்கென்று பாடுபட்டு அதனால் கீர்த்தி பெற்ற மாதர்கள் ஏதோ இரண்டு மூன்று பேர் தானிருக்கிறார்கள். அதிலும் இரண்டுபேர் மேல் நாட்டில் பிறந்து நம் தாய்நாட்டுப் புதல்விகளாய் விட்ட அனிபெஸண்டு அம்மையாரும் சகோதரி நிவேதிதா அம்மையாரும் ஆவர். மற்றவர் கிறிஸ்தவ மதத்திற் கென்று ஊழியம் செய்த பண்டித ரமபாய் அம் மாளே. பண்டித ராமபா யம்மாள் இந்து மதத்தைவிட்டுக் கிறிஸ்தவ மதத்திற் புகுந்து புனவில் கஷ்டப்படும் பெண்களுக் கென்று ஓர் ஆச் சிரமம் ஏற்படுத்தினாள். கடவுள்மேலிருந்த பக்தி வைராக்யத்தின லேயே அவ்வாச்சிரமத்தின் தினசரி கார்யங்கள் நடந்து வந்தன. எத் தனையோ சமயங்களில் நூற்றுக்கணக்கான பேர் வசித்துள்ள அவ்வாச் சிரமத்தில் அடுத்த வேளைச் சாப்பாட்டிற்குப் பணமில்லா திருக்கும் காலத்தில் கடவுளைப் பிரார்த்தித்து விட்டு முகமலர்ச்சியுடன் பணத்தை எதிர்பார்த்திருக்கும் காலத்தில் வெவ்வேறு திக்குகளிலிருந்து நண்பர் கள் பணமனுப்பி யிருக்கிறார்கள் என்று அந்த அம்மாள் எழுது கிறாள்.

பெசண்டம்மையார்.

நம் மெல்லோர்க்கும் தெரிந்த அன்னி பெஸண்டு அம்மாள் இன் றொருவிதமான ஊழியத்தைச் செய்து வருகிறார். தியாசபி என்கிற புதிய பிரமஞான மார்க்கத்தை அவருக்கு முன் சென்ற அம்மையார் பிளவாட்ஸ்கி என்ற அம்மையார் ஸ்தாபிக்க இவர் அதை நிலை நாட்டி வளர்த்து வருகிறார். அம்மார்க்கத்தின் தொண்டர்கள் உலக மெல்லாம் பரவி யிருக்கிறார்கள். அடையாறுக்குப் போய் அவர்களுடைய மஹா

நாடுகளொன்றைப் பார்ப்பவர்களுக்கே அவர் செய்திருக்கும் ஊழியம் எவ்வளவு பெருமை வாய்ந்த தென நன்கு விளங்கும்.

இத்தகைய பெருமை இந்தியப்பெண்கள் ஒருவருக்கும் இல்லை என்பது ஓர் விசனமான காரியமே. பெசண்டம்மை போல் மேன்மையான பேரடைய வேண்டுமென்பது அவசியமல்ல. நம் தேசத்து அம்மையார் களைப்போல் அரிய தொழில்கள் ஏதேனும் செய்தால் போதும்.

நாம் இருக்கும் நிலைமையி லிருந்து கொண்டே சிறந்த தெய்வ பக்தியுள்ளவர்களாய் வாழலாம். நாயனார்கள் சரித்திரங்களைப் படிக்கும்போது அதிற்கூறியுள்ள பெண்மணிகள் எத்தனையோ பேர் இல்லற வாழ்க்கையி லிருந்து கொண்டே தங்கள் கணவன்மார் தெய்வ ஊழியஞ் செய்யும் போது அவர்களுக்கு வலது கைபோ லிருந்து உதவி செய்கிறார்களென்று பார்க்கிறோம். நம்மில் பெரும்பாலோர்க்கு அவர்களுடைய முன்மாதிரியே போதும் என்றாலும், மதச் சீர் திருத்தங்கள் அங்யாவசியமாய் வேண்டியிருக்கும் இக்காலத்தில் நம் தேசத்துப் பெண்கள் முன்னுக்கு வந்து உத்தரவாதத்தை எடுத்துக்கொள்ளாதது நம் காலத்திற்கு ஓர் பெரிய குறையாகவே இருக்கும், சிலர் சொல்லுகிற பிரகாரம் ஒவ்வொரு தேசத்தவருக்கும் தூங்குகிற யுகங்களும் விழித்திருக்கும் யுகங்களு முண்டாம். இந்தியா தேசம் தற்காலம் தூக்கிக்கொண்டிருக்கிறதாம். மத உணர்ச்சியற்றும் தேசபக்தி யற்றுங் கிடக்கிறது. உதயகாலம் சீக்கிரம் வரவேண்டுமேன்றே நாம் பிரார்த்திக்கவேண்டும்.

பெண்கள் கடமை.

தேசம் தூக்கம் விழித் தெழுங் காலத்தில் பெண்கள் செய்ய வேண்டிய கடமை இன்னதென்று இப்போது கவனிப்போம். தெய்வ கடாக்ஷத்தால் நாமெல்லோரும் நம்முடைய மதக் கொள்கைகளின்னதென்று முற்றிலும் மறந்து போகவில்லை. வேதங்களையும், புராணங்களையும் ஆராய்ந்தறிய வேண்டு மென்கிற ஆசையும் நமக்கு முற்றிலும் அற்றுப் போகவில்லை. மூடத்தனமான பக்தியில் பிரயோஜன மில்லை. பகுத்தறிவை உபயோகிப்பது அத்யாவசியம். இவைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவோ கார்யங்களைப் பெண்களும் செய்யலாம். மேல் நாட்டு நாகரீகம் தேசத்துக்குத் தீமையே அதிகமாய் உண்டாக்கத் தக்க விதமாய்ப் பரவி வரும் இக்காலத்தில் பெண்களாகிய நாம் அந்நாகரீகம் பரவாதபடி முயற்சிகள் செய்யலாம். மேல் நாட்டுப் படிப்புப் படித்த மாணவர்களில் எத்தனையோபேர் கடவுளில்லை என்று சொல்வதும் கடவுளில் நம்பிக்கை யுள்ளவர்களைப் பார்த்துப் பரிகாசம்

பண்ணுவதுடன் உயர்தரப் படிப்பு நாகரீகத்திற்கும் ஓர் சிறந்த அடையாளம் என்ற எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இவ் வீண் கொள்கையை அறுத்து வீழ்த்தக் கூடியவர்கள் பெண்களே. "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றபடி சிறு பிராயத்தில் படிக்கும் கார்யங்களை மறப்பது மிகவும் கஷ்டம். சிறு குழந்தைகளின் குணத்தை அமைப்பித்து வருபவள் தாயே யாதலின் அவர்கள் பிற்காலத்தில் நற்குணசாலிகளா யிருப்பதற்கும் துர்க்குணங்களை யுடையவர்களா யிருப்பதற்கும் அவளே மூல காரணமா யிருக்கிறாள். குழந்தை கருத்தரிக்கும் காலத்திலிருந்தே அவர்கள் குணத்தைச் சரியான வழியிற் கொண்டு போகலாம் என்று சாஸ்திர மறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

குழந்தைகள் வளர்ந்துகொண்டு வரும்போது தாய்மார்கள் செய்யும் விதமாகவே அவர்களும் செய்ய வேண்டு மென்று ஆசைப்படுகிறார்கள். இது தாய்மாராகிய நமக்குக் கிடைத்ததொரு பாக்கியமும் உத்தரவாதமுமென் றெண்ணிப் பிள்ளைகளை தெய்வ பக்தியில் வளர்த்துக் கொண்டு வரவேண்டும். நம்முடைய மத ஆசாரங்களின் உட்கருத்து இன்னதென் றறியாமல் நம் முன்னோர்கள் சிறு பிராயத்திலே இப்பேற்பட்ட தெய்வ பக்தி மனதில் நன்றாய்ப்பதிந்து விட்டால் பிற்காலத்தில் சன்மார்க்க ஜீவியத்திற் கேற்படும் இடையூறுகளை யெல்லாம் மேற்கொண்டு தெய்வ பக்தியில் சிறந்தவர்களாய் விளங்குவது இலகுவா யிருக்கும். நம் நாட்டு ஆசாரங்களைப் பற்றி இகழ்ச்சியாய்ப் பேச வருங்காலத்திலும், தாய்மாருடைய மனம் வருந்தக் கூடாதென்று எத்தனையோ மாணவர் தாய்மார் சொல் தவறாமல் நடந்து வருகிறார்கள்.

இன்னுமொரு கடமை நமக்குண்டு. நாம் அனுசரித்து வரும் மத ஆசாரங்களின் உட்கருத்து இன்னதென்று நம்மில் அநேகர்க்குத் தெரியாது. நம்முடைய முன்னோர்கள் இவ்விதம் செய்தார்கள். நாமும் அவ்விதமே செய்வோமென்று ஆசாரங்களின் ஆழ்ந்த அர்த்தம் இன்னதென்று அறியாமலே அவைகளைக் கையாடிக்கொண்டு வருகிறோம். அந்த அர்த்தத்தை விளக்கி காட்டுவதற் கென்றே ஓர் சாஸ்திர மிருக்கிறது. அதை நாம் வாசித்தால் நலமாயிருக்கும்.

மூன்றாவதாக மிஸ் மேயோ போன்ற பெரு மாட்டிகள் இந்துமதத்தைப் பற்றிக் கேவலமாய்ப் பேசத்தக்க விதமாய் நாம் நடந்து கொள்ளா திருத்தல் வேண்டும். மேல் நாட்டின் மூடக்கொள்கைகளையும் அழுக்குகளையும் நாம் எடுத்துக் காட்டுவதனால் நம் நாட்டில் காணப்படும் தீமையான காரியங்கள் ஒழிந்து போகாது. நம்முடைய கோயில்களில் எவ்வளவோ சீர்

திருத்தங்களும் நாம் செய்யலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்து ஆலயங்களையும் கிறிஸ்தவ ஆலயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கிறிஸ்தவ ஆலயங்கள் எவ்வளவோ சுத்தமாயும் அழகாயும் வைக்கப்பட்டிருக்கிறதென்று நாம் எளிதில் பார்க்கலாம். கோவிலைச் சுற்றி அழகான பூந்தோட்டங்களு மிருக்கிறது. இதற்கு எதிரிடையாக இந்து மதக் கோயில்களில் முதலிலிருந்து மூலஸ்தானம் வரையும் தற்காலத்தில் அசுத்தமும் அழுக்கும் படிந்திருக்கிறது. கூரையில் வௌவால்கள் தொங்கிக்கொண்டு தரையையும் ஆகாயத்தையும் அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். வீட்டைச் சுத்தமாயும் ஒழுங்காயும் வைப்பது பெண்களின் கடமைதான். கடவுளைத் தொழுது கொள்ளும் ஆலயங்கள் நம்மெல்லோருக்கும் பொதுவான வீடு. ஆணகளுக்கு வீட்டைச் சிங்காரிப்பதிலும் ஒழுங்காய் வைப்பதிலும் கஷ்டமில்லை யென்பது நமக்குத் தெரியும். அரசாங்க விஷயத்திலும் பெண்கள் தலையிட்டு வேலை செய்வது நல்லதென்று கொண்டாடுகிற நாம் அதிலும் மேன்மையான மத விஷயங்களில் பொதுஜன நன்மையைத் தரத்தக்கதான பெரிய வேலைகளை எடுத்துச் செய்வது நலமெனத் தோன்றுகிறது. பண்டைய காலத்திலே பெண்களே கோவிற் பணிகளைச் செய்து வந்தார்களென சாஸ்திரம் சொல்லுகிறது. அவர்கள்தான் தேவதாசிகள். நம்முடைய கோவில்கள் எவ்வளவு அழகாய்க் கட்டப்பட்டிருக்கிறதென்று உலகமெல்லாம் புகழுகிறது. ஆனால் நாம் அக்கோவில்களை வைத்துக் காப்பாற்றும் முறையைப் பார்த்தால் யார்தான் இகழமாட்டார்கள்? அநேக விஷயங்களில் இந்தியர்களாகிய நாம் தூக்கந் தெளிந்து கண்விழித்துப் பார்த்து நம் தேசத்தைச் சுத்தம்பண்ணி அழகு படுத்த வேண்டும். அதில் முக்கியமானதொன்று மதவிஷயமே.

நாம் கவனிக்க வேண்டிய இன்னுமொரு அவசியமான காரியமுமுண்டு. இந்து மதத்தைச் சிலர் கேவலமாய்ப் பேசுவதற்கு ஓர் முக்கிய காரணமுண்டு. வேதாந்தத்தைப் படித்தவர்கள் நம்மில் வெகு சிலரே. பல கடவுள்களைத் தொழுது வருவது தப்பிதம் என்று நான் இங்கே சொல்ல வரவில்லை. எத்தனை தெய்வங்களை நாம் கும்பிட்டு வந்தாலும் கடவுள் ஒருவரே என்று நாம் எல்லாரும் சொல்வோம். மத விளக்கமுடைய நாம் கோயில்களுக்குப் போய் வருவதோடு மத வொழுக்கத்தை விட்டு விடக்கூடாது. மத விஷயத்திற் குரிய உயர்தர ஞானத்தை விளக்குகின்ற சாஸ்திரங்களையும் வாசிக்க வேண்டும். பெண்களின் உயர்தரக் கல்வி வேறொன்றுக்கும் உபயோகப் படாவிட்டாலும் உயர்தர சாஸ்திரங்களை வாசிப்பதற்கு நம்மை ஆளாக்கிவிட்டாற் போதும்.

உருத்திர சூக்தம்.

இருக்குவேதம் மண்டலம், 2. சூக்தம், 33.

I

திரு. ந. ராமகிருஷ்ண விச்வகர்மன்.

(வேதமாணக்கன்)

(இஃது இருக்குவேதத்தில் உருத்திரனைக் குறித்துக் கூறப்படும் மூன்றாஞ் சூக்தம். பதினைந்து மந்திரங்கள் கொண்டது. இம்மந்திரங்களின் நேர் தமிழ் பெயர்ப்பும் கருத்தும் பொருள் விளக்கமும், திரு. மெக்டொனல் (A. A. Macdonel) ஆங்கில மொழிபெயர்ப்பும் மந்திரங்களில் காணப்படும் அருஞ் சொற்களின் பொருட்குறிப்புக்களும் வரையப் படுகின்றன.).

தமிழ்.

1. மக்களைக் காக்கும் மருத்துவ! நினது உயரிய உள்ளத்தினை யாங்கள் பெற்றிடுக. ஞாயிற்றின் நலனுறு காட்சியை எங்களினின்று அகற்றற்க. எங்கள் வீரர் பகைவரிடத்து எதிர் நின்று பொருதிடுக. யாங்கள் மக்கட் பேற்றுடன் நல்வாழ்க்கை யெய்திடுக.

2. மருத்துவ! நின்னால் அளிக்கப் பெற்ற நலஞ் செய் நன் மருந்துகளால் யாங்கள் நூறாண்டு வாழ்வடைகின்றோம். எங்களினின்று சினத்தினை யொழித்திடுக. பகைமையினை யகற்றிடுக. யாண்டும் பரவும் நோய்களை அழித்திடுக.

3. கருவிகள் கையுறை மருத்துவ! படைக்கப்பட்டுள்ள உலகங்கட்குத் திருவெய்து வித்தலால் மேதக்கோனாகின்றாய். வலியார்க்கு மிக்க வலியோனாகிய நீ எங்களை பாவத்தினின்றுய்வித்து இன்பகிலை பெற்றிடச் செய்க. குறைகளை எவ்வகையானும் பொருது சிதறடித்திடுக.

4. வலிமை மிக்க மருத்துவ! நின்னைப் போற்றித் தொழுதலால் எங்களைக் கடிந்து கொள்கின்றாயில்லை. இகழ்ந்துரைத்தலால் வெறுத்தலுமில்லை. அடிக்கடி அழைத்தலால் சினத்தலுமில்லை. நீ வைத்தியர்களில் மிகச் சிறந்த வைத்தியனென்று கேள்வி யுறுகின்றேன். நீ எங்கள் வீரர்கட்கு ஔடதங்களால் மிக்க உடல் நலன் ஊட்டிடுக.

5. யாவன் காணிக்கையுடன் கூடிய வேண்டுகையினால் அழைக்கப் பெறுகின்றானோ; அவ் வைத்தியனைப் பொருள்களால் மகிழ்விக்கின்றேம்.

அவன் உண்மையான உயரிய ஒழுக்கமுடையானும், புகழத்தக்கவனும் பேணுகின்றவனும், நிறைவுடையானுமாக விளங்குகின்றான். அவன் இவ் இறுமாப்பினால் நம்மை அழிக்காதிருக்க.

6. மக்களுடன் கலந்துறையும் வலிமை மிக்க மருத்துவ ! தலைவனாதற்கு ஆர்வமுள்ள எம்மை ஆற்றலளிக்கும் உணவுகளால் உயர்த்திடுக. வெயிலில் காய்கின்றவன் நிழலையடைய விரும்புமாறு ; எமது குறைகளைத் தவிர்த்திட வைத்தியனது இன்னுரைகளை யேற்று, அவற்றிற் கிணங்கக் காலம் கழித்திடுவேனாக.

7. ஊன் மிக்க மருத்துவ ! மருந்துருவாகியதும் குளிர்ச்சி பொருந்தியதும் இன்பமும் தாய்மையும் பயப்பதுமாகிய நினது கைகள் யாண்டுள ? புலன்களாலுண்டாங் குறைகளையகற்றி எம்மைச்சீர்படுத்துக.

8. யாவரையுங் காத்தோம்பும் ஆற்றல் மிக்க ஒளிமயனாகிய பரமேசுவரனுக்கு மிகப்பெருமை வாய்ந்த செம்மொழிகளால் வணக்கஞ் செலுத்திடுவாம். தனிப் பெருஞ் சோதியானைப்போற்றித் துதித்திடுக. வினை தீர்க்கும் உருத்திரனது புகழ் மிக்க திருநாமங்களைச் சிந்தித்திடுக.

9. நிலைபெற்ற உறுப்புக்களோடு யாண்டும் நிறைந்து வீரனாக யாவரையுங் காத்தோம்புகின்ற இறை முதற்பொருள் தூயவொளியினால் மிளிர்கின்றான். இப்பெரும் உலகிற்கு ஒப்பற்ற தலைவனா யிலங்கும் உருத்திரனது தெய்வீக ஆற்றலை வேறு எத்தகையோரானாலும் வேறுபடுத்துவதற் கியலா.

10. துயர் நீக்கு மிறைவ ! நீ தக்கோனாதலால் அம்பும் வில்லுமணிந்தனை. நீ அருகனாதலால் ஒளி வடிவும் வழிபடுந் தகைமையும் யாண்டும் பரந்து நிற்கும் பான்மையும் படைத்தனை. நீ உரியனாதலால் கண்ணகன் ஞாலத்துக் கருணை பொழிகின்றனை. நின்னை யன்றிப் பிறரெவரும் மிக்க வலியரல்லர்.

11. இருதயத்தி லுறைபவனும், குமாரனும், அறிஞனும், தம்மகத்தே காணத் தக்கானுமாகிய பரமாத்மனை வழிபடுமின். அஃதெவ்வாறெனின், துன்புறுத்தும் அச்சம் மிக்க கொடிய சிங்கம் முதலிய விலங்குகளை அவை தங்கும் குகைகளில் சென்று வேடுவர் அடைவதுபோல என்க. ஆகுலந் தீர்க்கு மிறைவ ! வணங்கத்தக்க நீ வழிபடுவார்க்கு இன்பம் நல்குக. நினது ஆற்றலை ஆத்திகர்களாகிய எங்களையன்றி பிறர்பால் செலுத்துக.

12. ஆகுலந் தீர்ப்பவ ! புதல்வன் தன்னை அணுகுந் தந்தையை வணங்குவதொப்பப் போற்றத்தக்க நின்னைத் தொழுகின்றேம். பெரும்

வள்ளலும் நற்றலைவனுமாகிய நின்னைப் புகழ்ந்திடுவேம். துதிக்கப்பெறு கின்ற நீ எங்கட்கு ஔடதங்கள் அருளுகின்றனை.

13. ஆற்றல் மிக்க பிராண ! நினது தூய மருந்துகள் மிக்க நலன் விளைப்பன ; நோயணுகாது காக்கும் பெற்றியன. நம்மை ஆளும் மனிதனால் பெறத்தக்கதான, துயர் நீக்கும் அம்மருந்துகளை நலனும் நோயணுகாமையும் அடைதற் பொருட்டு எம் வசம் வைத்திருக்க விழைகின்றேம்.

14. உதாரசீல ! சோதி மயனன உருத்திரனது அம்புகள் எம்மை அடையாது அகன்றிடுக. பெரிதாகிய தீய சிந்தனை யொழிந்திடுக. செல்வரிடத்து நிலைப்பினை யருளுக. சிறுவர்களுக்கு நலன் விளைத்திடுக.

15. காத்தோம்புகின்றவ ! ஆற்றல் மிக்கானும் அறிவு சான்றவனும் குறைகளை இரங்கிக் கேட்கின்றவனும் இடுக்க ணொழிக்கின்றவனுமாகிய இறைவ ! நீ எங்ஙனம் சினந்திடாது கோறல் புரியாது மிருக்கின்றனையோ அங்ஙனமே ஈண்டு எங்கட்கு அறிவுறுத்திடுக. போர்க்களத்துச் சிறந்த வீரனுக்கி மிக்கக் களிப்புடன் மொழிந்திடச் செய்க.

கருத்தும் பொருள் விளக்கமும்.

இம்மூன்றும் உருத்திரசூக்தம் இருக்குவேதம் இரண்டாம் மண்டலம் முப்பத்துமூன்றாஞ் சூக்தமாகும். இதன் சந்தசு அல்லது யாப்பு ஜகதி, திரிஷ்டுப், இருடி அல்லது பொருள் காணும் வகை கிருத்ஸமத வெனப்படும். கிருத்ஸமதர் இச் சூக்தப் பொருளை முதற்கண் உலகிற்கு வழங்கினரென்றுங் கூறுவர். தேவதை அல்லது உணர்த்தப்படும் பொருள் (Subject matter) உருத்திரன். "ருத்ர: —ருத் ரோக: தம் த்ராதிகமயதி நாசயதி இதி ருத்ர வைத்ய: உருத்திரன் நோய்களை யகற்றித் துன்பம் துடைத்தலால் மருத்துவனுவான். அன்றியும், பிறவிப் பிணியினை யொழிக்கின்ற மருத்துவன் முழுமுதல் தலைவனு மிறைவனுதலால், அவனை வைத்தியநாதன், வைத்தியராஜனென்று இவ்வுருத்திரப் பெயரால் குறிக்கப்படும். எனவே இச் சூக்தம் மருத்துவ வியல்பும் இறையியல்பும் உணர்த்தும். இவற்றுள் முறையே பிணியுடையார் கடமை, மருத்துவர் கடமை, மருந்துப் பொருட்களி னியல்பு, பல்வகை மருத்துவ முறைகள், உள்ள அமைதியால் உடல் நலன் பெறுதல், நல்லெண்ணத்தின் சிறப்பு முதலிய பல்துறைப்பட்ட மருத்துவ முறைகளும் ; சிறப்பாக எட்டாவது மந்திரம் முதல் உயிர்களின் பிறவிப்பிணியை யொழிக்கின்ற மருத்துவர்களில் சிறந்த மருத்துவன் இறைவனே யாமென்பதும், அவ் இறைவன் ஆற்றலே யாவற்றிற்கும் முதற்காரண மாமென்பதும், அவ்வாற்றல் மிக்க இறைவன் எவ்வுயிர்களினும் உள்ளும் புறமும் ஊடுருவி நிற்றலான் இதயத்துக்

கண்டு வழிபடுக வென்பதும், அக்கருணை வள்ளல் உயிர்களிடத்துத் தந்தை மகற் றொடர்புடையானென்பது ம் பிறவும் அறிவுறுத்தப்படுகின்றன.

சூரிய வெளிச்சமும் உடல் நலமும்

1. வைத்தியனது சிறந்த கருத்துக்களை யாவரும் நினைந்திடுக. எந்த உயிரும் சூரியவொளி பெறாது மறைதலாகாது. மக்களிடத்து சூர வீரத் தன்மைகள் ஓங்கிடுக. மக்கள் பெருகுக.

'கதிரவனது சிறந்த ஒளியினின்று மக்களாதி எவ்வுயிரும் தவிறற்க' என்பது இம்மந்திர வுரை. சூரிய வெளிச்சத்திற்கும் உடல் நலத்திற்கும் நிலைத்த தொடர்பு உண்டு. கதிரவனொளி 'சோசிஷ்கேச' யாவற்றை யுந் தூய்மைப்படுத்துவது. யாண்டும் நிலவியின்று அனைத்தையும் தூய் மைப்படுத்துவதால் பகலவனொளியாவர்க்கும் உடல் நலன் பயக்கின்றது. வெயிலிலேயே அலைந்து திரியாதவன் மிகுந்த உடல் நலன் பெறமாட் டான். கதிரவனொளியை நுகருகின்றவன் மிகுந்த உடல் வளம் பெறு கின்றான். 'சூரியனால் நீவிர் யாவரும் நீண்ட ஆயுள் படைக்கின்றீர்' என்பது அதர்வ வேதம் (XIV, I, 47). 'இவ் வாதித்தன் உயிர்களுக்குப் பிராணனாக மிளிர்கின்றான்' பிரச்நோபநிஷத் (I, 7).

இக் கதிரவன் உயிர்கட்கு உயிராவனோ ? உறுதியாகவே கதிரவன் உயிராக விளங்குகின்றான். சூரியன் யாவற்றையும் ஒளிபெறச் செய்த லால், அனைத்துயிர்கட்கும் தனது கதிர்க்கற்றைகளால் உயிர் நிறுவுகின் றான். ஆதித்தன் புறவுலகத்திற்கு உயிர் நிறுவுகின்றான். 'ஆதித்தன் புற வுலகத்திற்கு உயிர்' என்பனவாகக் கதிரவன் உயிரென்று பிரசின உபநி டதம் முறையிடுகின்றது. உயிர் நிலைத்து நிற்பது வரையிலுந்தான் ஆயுட் காலமாகலான் நீண்ட ஆயுளுக்கும் பிராணனுக்கும் மிகுந்த ஒற்றுமை யிருத்தலோர்க.

'கதிரவன் நிலையல் இயங்கியல் திணைகளாகிய உயிர்கட்கெல்லாம் ஆன்மாவாக விளங்குகின்றான்' என்பது இருக்கு (I,CXV, I) வேதம். இவ்வாறு வேதங்கள் சூரியனையும் அவனது ஒளியின் பெருமையையும் பகர் கின்றன. போகிகள் வெயிலில் அல்லது மர நிழலில் உட்கார்ந்து இருவே ளைகளிலும் பிராணாயாமம் புரிகின்றனர். கதிரவனொளி வாயிலாகக் காற் றிற் கலந்துள்ள பிராணனைத்தங்களகத்து எற்றுக்கொள்கின்றனர். சூரி யோதயத்திலும் அத்தமனத்திலும் பிராணாயாமம் செய்வதின் சிறந்த நோக்கம் யாதெனின் ; இரு வேளைகளிலும் சூரியனுக்கெதிராக உட் கார்ந்து கிரணங்கள் வாயிலாக உயிர்ப்பைப் பெறுகின்ற காற்றினை பிரா ணயாமம் மூலமாக உள்ளே சேர்ப்பதால் ஒரு வகையான பெருங்கிளர்ச்சி

எய்துகின்றனர். சூரியவொளி இல்லாத இடத்துச் செய்வதால் இத்தகைய பூரிப்பு அடைவதில்லை. இவ்வாறு வெயிலுக்கும் உடல் வளத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை இம்மந்திரத்து :—

'ந ஸூர்யஸ்ய ஸம்த்ருச : மா யுயோதாஃ' சூரியவொளி படாது விலகி யிருத்தலாகாதென்று வற்புறுத்துகின்றது. இதனை திரு. கிரிபித் (Exclude us not from looking on the sunlight) என்று மொழிந்திடுவர். இக்கருத்திற் கிணங்க நாம் உறையு மிடங்கள் எஞ்ஞான்றும் சூரிய வொளி நன்கு பெறத்தக்கதாக அமைத்திடல் வேண்டும். எத்துணை உயரிய உப்பரிகையாயிருந்த போதிலும் வெயில் படாதிருப்பின், அதன்கண் வதிவோர் நோயால் பீடிக்கப்பெறுவர். மரநிழல் முதலிய திறந்த வெளிகளில் வதிவோரது ஆயுளை விட வீடுகளில் வாழ்பவர் குறைந்த வயதுடையவர்களா யிருக்கின்றனர். இதனுனே இல்லங்கள் 'க்ஷய' என்னும் பெயரால் வேதத்து விளிக்கப்படுகின்றன. வீடுகளிலேயே தங்கிக் கிடக்கும் மக்கட்டு ஆயுள் குறைகின்றது. வீடின்றி வாழ்தல் நகரவாசிகளுக்கு எக்காலத்து மியலாது. எனவே சூரிய வொளியும் தூய காற்றும் எக்காலத்தும் நன்கு பெறத்தக்கவாறு சக்கவிடத்து வீடுகள் எடுத்தல் வேண்டும். நாள்தோறும் சிறிது பொழுதாவது வெயிலொளி படுதல் வேண்டும். இதனுல் மக்கட்கு உடல்வளமும் ஆயுளும் வலிமையும் மிகும்.

இம்மந்திரத்தின் பிற்பகுதியில் 'அர்வத' என்னும் மொழி சிந்திக்தற்குரியது. அது தாழ்ந்த குறைந்த இழிந்த கேடுற்ற அற்பர் கொடியவர் சயவர் தீயோர் முதலியவர்களைக் குறிக்கும். எனவே 'நமது வீரர் இழிந்த தீயமக்களை யொழித்திடுக'. அதாவது தலையெழாதிருக்கச் செய்கவென்று அறைகின்றது. மக்களுள்ளதது இழிந்த நோக்கங்கள் பரவாதிருக்கக் காத்திடல் வேண்டும். ஒரு சமூகத்துத் தீயோர் தலையெடுப்பாராயின் மிகுந்த கேடுகள் விளையும். இதனுல் தீநெறி பெருகும். நோய்கள் பரவும். ஆயுள் குறையும். எனவே சான்றோரை யணுகி நற்போதனைகள் பெறுக. தீநெறி யகற்றுக. கதிரவனொளி படுக—என்பன இம்மந்திரத்தாற் போந்த கருத்துக்களாம். இதனுல் நோயின்றி மக்களிடத்து எல்லா நலனும் பெருக்க மடையும்.

1. Let Thy goodwill, O father of the Maruts,
Light on us : part us not from Surya's Vision
In mercy may the hero spare our horses :
May we, O Rudra, have abundant off spring.

(தொடரும்.)

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

(முன் 254ம் பக்கத் தொடர்ச்சி)

மதுசாரம் இருதயத்தின் சூக்குமரந்திரங்களைக் கெடுக்கிறது.

இருதயமும் அதன் வேலையும்.

மனித தேகம் சூக்குமரந்திரங்களாலாக்கப்பட்டதென முன்னமே தெரிந்திருக்கின்றோம். அச்சூக்குமரந்திரங்களுக்கு ஆகாரம் வேண்டும். ஆகாரம் வயிற்றுக்குள் செல்லுகின்றது. அவ்வாகாரம் மூளை, பாதம் இவற்றின் சூக்குமரந்திரங்களுக்கும், தேகத்தின் மற்றப் பகுதிகளுக்கும் செல்லுவதற்கு ஒரு திட்டமிருக்க வேண்டும். நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள உயிர்வாயு அல்லது சூக்குமதேயு (Oxygen) சுவாசாசயத்திற்குச் செல்லுகின்றது. அவ்வுயிர்வாயு எல்லாச் சூக்குமரந்திரங்களுக்கும் சமமாகச் செல்லல் வேண்டும். மூத்திராசாசயங்களும் விஷப்பொருள்களை வெளியே கழிக்கின்றமையால், அவ்வுயிர்வாயு அவற்றிற்குச் செல்லுதல் வேண்டும். சில சமயம் ஈரலிலும், தசைகளிலும் உஷ்ணம் அதிகரித்து, மற்றப் பாகங்களில் போதுமான உஷ்ணமில்லாமல் குறைந்திருக்கும். இவ்வாறிருப்பது சுகவீனத்திற்குக் காரணமாகும். ஆதலால், உஷ்ணம் தேக மெங்கும் சமமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு சமமாகச் செய்வது இரத்தத்தின் வேலையேயாம். தேகம் வளரவும், தேகத்தில் எப்போதும் நடைபெறும் தேய்வை மீள அமைக்கவும், தேகமுழுவதும் சமமான உஷ்ணமிருக்கவும், தேகத்திலிருந்து விஷப் பொருள்கள் வெளியே கழிந்து சுத்தமாயிருக்கவும், ஆகாரத்தையும் நீரையும் உயிர்வாயுவையும் சூக்குமரந்திரங்களுக்குக் கொண்டுபோயுதவுவது இரத்தமேயாம்.

"இரத்தமே பிராணன்" ஆனதால், அவ்விரத்தம் தேகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் போதுமான அளவுவுதவ வேண்டும். இரத்தம் சூக்குமரந்திரங்களினிடையில் ஓடுகிறதினால், அது, அவற்றைப் போஷிக்கின்றது. அவற்றிற்கு உயிர்வாயுவை யுதவுகிறது. விஷப் பொருளைக் கொல்லுகிறது. மிக்க சூடுள்ள சூக்குமரந்திரங்களைக் குளிரப் பண்ணுகின்றது. குளிர்ந்திருக்கும் சூக்குமரந்திரங்களைச் சூடாக்குகின்றது. அது

எல்லாவகையிலும் சூக்குமரந்திரங்கள் வேலை செய்வதற்கும், அவை உள்ள நாளளவும் உயிரோடிருப்பதற்கும் அவசியமானவற்றைச் சேகரித்து உதவுகின்றது ; ஆதலால்,

தேகத்தை	அமைக்கிறது சீர்படுத்துகிறது உஷ்ணமாக்குகிறது சுத்திகரிக்கிறது சுகமாய்வைக்கிறது	**இரத்தம்**

21037

என்று சொல்லலாம்.

ஆகவே, இரத்த மொன்றே சிற்பன், வைத்தியன், எரிமூட்டுவோன், தெருச்சுத்தஞ் செய்வோனுகவு மிருந்து, எல்லா வேலைகளையுஞ் செய்கின்றது.

இருதயம் நீரிறைக்கும் யந்திரமாகும்.

இருதயம், இரத்தக் குழல்கள் (the blood vessels), தேகத்தில் பழுதான அணுக்களை வாங்கி இரத்தத்திலே செலுத்துங் குழல்கள் (the lymphatic vessels) இவற்றின் மூலமாகவே இரத்த வோட்டம் நடைபெறுகிறது.

இருதயம், இரத்தத்தைத் தேகமுழுதுஞ் செலுத்துகிறது. அவ்விரத்தம், ஆகாரத்தையும் உயிர்வாயுவையுங் கொண்டு போய்ச் சூக்குமரந்திரங்களுக்கு உதவுகிறது. அன்றியும், அது தேகத்திலிருந்து கழிய வேண்டிய விஷப்பொருள்களை ஆராய்ந்தெடுத்துக் கொள்ளுகிறது. இருதயம், மார்புக் கூட்டில் வலப்பக்கச் சுவாசாசயத்திற்கும் இடப்பக்கச் சுவாசாசயத்திற்கும் நடுவே யிருக்கிறது. அது தேகத்தில் நீரிறைக்கும் யந்திரம் போலாகும். அது, தேகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் இரத்தத்தைச் செலுத்துகிறது. நாம் வசிக்கும் பட்டணத்தில் நீரிறைக்கும் யந்திரம் இரவும் பகலும் வேலை செய்து, நம்முடைய வீட்டிற்குப் பூமியின் கீழாக அநேக மைல் தூரத்திலிருந்து குழாய்களின் மூலமாய் சலம் வருவது நமக்குத் தெரியும். அந்த யந்திரம் உடைந்து விட்டாலும் அல்லது நின்று விட்டாலும் வீட்டில் சல மிராதல்லவா ?

அது போலவே, இருதயம் இரத்த மிறைக்கும் யந்திரமாம். அது, உன்கை முட்டி (fist) யினும் பெரியதல்ல. அது, எலும்பு, தசை மூளை, நரம்புகள், சுவாசப்பைகள், வயிறு, ஈரல், உரோமம், தோல், நகங்கள் இவற்றிற்குப் போதுமான அளவு உதவும்படி, தேகத்திலுள்ள மைல்கணக்காக நீண்டிருக்கும் இரத்தக் குழல்கள் அல்லது இரத்தக்குழாய்கள் மூல

மாய் இரத்தத்தைச் செலுத்துகிறது. அக்குழல்கள் அல்லது குழாய்கள் இத்தனைமைல் தூரமிருக்கு மென்று சொல்வது கடினமாகும். ஆனால், ஒரு மனிதனுடைய சுவாசாசயத்தில் அடங்கி யிருக்கும் இரத்தக் குழாய்களை மாத்திரம் ஒரே நீளமான குழாயாகச் செய்தால், அது லண்டன் பட்டணத்திலிருந்து நியூயார்க் (New York) குப்பட்டணம்வரை நீளக் கூடுமெனச் சொல்லப்படுகிறோம். அதாவது 3100 மைல்.

இருதயம் கடினமானவேலை செய்கிறது.

இருதயம், தேகத்தில் மிகக்கடினமான வேலை செய்யும் உறுப்பாம். அது, இரவும் பகலும் சிறிதும் ஓயாமல் இரத்தத்தைச் செலுத்துகிறது. அவ்விரத்தம், ஒவ்வொரு ஒன்றேகால் நிமிஷத்தில் தேகத்தை இரண்டு தரஞ்சுற்றிவருகிறது. அது, நீண்ட ஆயுட்காலத்திற்குள் 3,000,000,000 தரம் துடிக்கு மென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

இருதயம் நல்ல ஓய்வடைகிறது.

இருதயம்கடினமான வேலை செய்வதால், அது நல்ல ஓய்வடைகிறது. அது ஓய்வடைய வேண்டியதே. கடினமான வேலை செய்யும் வேலைக்காரனுக்கு வேண்டியது போலவே அதற்குத் தன்னைப் போஷிக்கற்கு நேரம் வேண்டும். வேலையினாலுண்டாகுந் தேய்வைச் செவ்வையாக்கிக் கொள்ள வேண்டும். சாதாரணமாகத் தான் வேலை செய்வதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்.

ஒரு சிறுவன் வளர்ந்து வரும்போது அவன் இருதயம் முக்கியமாய்க் கடினமாக வேலை செய்கிறது. ஒரு சிறுவன் ஆண்மை (Manhood) யையும் ஒரு சிறுமி பெண்மை (Womanhood) யையும் அடையும் பருவத்தில் இருதயம் அதிகமாகவேலை செய்கிறது. இப்பருவத்தில் இருதயத்திற்கு அனாவசியமானபிரயாசை கொடுப்பது சிறிதுங் கூடாது. பிரயாசை கொடுத்தால் அப்பிரயாசை, சிலகாலம்வரையுந் துன்பத்திற்கே கொண்டு போகும். ஆகலால், இருதயம் ஓய்வுகொள்ள வேண்டும். அவ்வோய்வை அது எப்படி அடைகிறது? இருதயத்தின் துடிப்புக்களை ஐந்து பாகமாக்கி, ஒவ்வொரு பாகத்தையும் ஐந்தில் ஒரு பாகமாக்கிப் பார்ப்போம். அவ்வாறு பார்ப்பதில் ஐந்தில் மூன்று பங்கு $\frac{3}{5}$ காலம் வேலைசெயயம் ஐந்தில் இரண்டு பங்கு $\frac{2}{5}$ காலம் ஓய்வும் ஆகிறது. ஆகவே, இருதயம் ஒருநாளைக்கு அல்லது 24 மணி நேரத்திற்கு ஏறக்குறைய 14 மணி நேரம் வேலைசெய்கிறது. 10 மணி நேரம் ஓய்வடைகிறது.

ஒருவனிடத்தில் நாளொன்றுக்கு 14 மணிநேரம் வேலை செய்யவும், 10 மணிநேரம் ஓய்வடையவும் நல்ல குதிரையொன்றிருந்தது. அவன் அதனை நாளொன்றுக்கு 16, 18 மணிநேரம் வேலைசெய்யச் செய்தால், அக்குதிரை நல்ல வேலை செய்யுமா ? செய்யாது. ஏனெனின், அது ஓய் வடைகிற நேரத்தில் அதிக நேரத்தை அதிக வேலை செய்வதற்காக அவன் எடுத்துக் கொள்வதால், அக்குதிரையின் சுகமுங் கெடுகிறது, வேலையுங் குந்தகமாகிற தென்று தெரிகிறதல்லவா ?

மதுசாரம் இருதயத்தைக் கெடுக்கிறது.

1. இருதயம், தேகத்தின் மற்ற உறுப்புக்களைப் போலவே சூக்கு மாந்திரங்களால் (முக்கியமாய்த் தசையின் சூக்குமாந்திரங்கள், நரம்பின் சூக்குமாந்திரங்கள்) ஆக்கப்பட்டது. "நூறு பங்கில் கால் பங்கு மது சாரஞ் சேர்ந்துள்ள இரத்தத்தைப் பல சோதனைகள் செய்து பார்த்ததில் இருதயத்தின் வேலை ஒரு நிமிஷத்திற்குள் குறைந்து விட்டதென்று ஸர்விக்டர் ஹோர்ஸிலி சொல்லுகிறார். இவ்வித மெலிந்த நிலைமையில் இருதயம் இரத்தத்தைக் குறைவாகவே செலுத்துகின்றது.

2. மேற் சொன்னபடி இருதயத்தின் இரத்த மிறைக்கும் வேலை குறைந்தாலும் மதுசாரம், இருதயத்தை வேகமாகத் துடிக்கப் பண்ணு கிறது. ஒரு அவுன்ஸ் மதுசாரம் (ஒருபயிண்ட் சாந்தமுள்ள மதுவில்) 24 மணி நேரத்தில் இருதயத்தின் துடிப்புக்களை 4300 துடிப்புக்களாக அதிகப்படுத்துகிற தென்றும், இரண்டவுன்ஸ் மதுசாரம் (ஒரு பயிண்ட் வெறியுள்ள மதுவில்) 8000 துடிப்புக்களாக அதிகப்படுத்துகிற தென்றும், நான்கு அவுன்ஸ் மதுசாரம் (ஒருபயிண்ட் போர்ட் ஒயினில்) 13000 துடிப் புக்களாக அதிகப்படுத்துகிற தென்றும் டாக்டர் பார்க்ஸ் (Dr. Parks) என்பவர் தமது மதுசோதனையினால் கண்டுகொண்டதாகச் சொல்லு கின்றார்.

இவ்வாறாக, இருதயம் அதிக வேலை செய்வதற்கு அதிக நேரம் வேண்டியது அவசியமானதால், அந்நேரம் அதற்கு எங்கிருந்து கிடைக் கிறது ? இருதயத்தின் ஓய்வு நேரத்திலிருந்தே கிடைக்கிறது. இவ்வித மாக, இருதயம் நாள்தோறும் அனாவசியமாக வேலை செய்யுமானால், அதற்குத்தக்க வோய்வு மிராது. தக்க போஷணையுமிராது. தானே தன் னைச் சீர்படுத்திக் கொள்ளவும் நேரமிராது. ஒருவனிடத்தில் நாளொன் றுக்கு 100000 சுற்றுச் சுற்றினால் 70 வருடத்திற்கு நீடித்து வரக் கூடிய ஒரு நல்ல யந்திர மிருந்தது. அவன், அதை 125000 சுற்றுச் சுற்றும்படி

செய்தான். அதனால், அவ்யந்திரம் 70 வருடம் ஆவதற்கு வெகு நாளைக்கு முன்னமேதானே தேய்ந்து போய் விட்டது. (இது போலவே குடியர்கள், இருதயத்தின் வேலையை அதிகப்படுத்துகிறார்கள்).

மதுசாரம் இருதயத்தின் வேகத்தை யடக்குங் கருவிகளைக் கெடுக்கிறது.

இருதயத்தின் வேகத்தை யடக்கியாளவும், அதனைக் கிரமமாக நடைபெறச் செய்யவும், அதில் நரம்புகள் அமைந்திருக்கின்றன. அந்நரம்புகள் எளிதில் உணருந்தன்மையுடையன வாதலால், அவை, எதனாலாகிலுந் தாக்கப்பட்டால், அதிவிரைவில் பெரிதும் பீடிக்கப்படுகின்றன. அந் நரம்புகள், பைசிகல் அல்லது மோட்டார்காரி (Motor Car) லிருக்கும் பிரேக் (brake = வேக மடக்கி) கைப்போலவும், குதிரையின் வேகத்தை யடக்குங் கடிவாளத்தைப் போலவும் வேலை செய்கின்றன. ஆனால், மதுசாரம், அந்நரம்புகளைச் செயலில்லாமலும் உணர்ச்சி யில்லாமலும் செய்கின்றது. ப்ரேக் இல்லாமல் ஒரு குன்றின்மேலிருந்து கீழேயிறங்கும் பைசிகலைப் போல, இருதயமானது மதுசாரததின் சக்தியால் தடைபடாமல் வேகமாய்ப் படபடவென்றடிக்கிறது. கடினமாக வேலை செய்கிறது. ஆயினும், அது செய்யும் வேலையோ குறைவானதேயாம். இவ்விதமாக இருதயம் தன் சக்திக்கு அதிகமான வேலை செய்வதால், ஓய்வையும், உணவையும், தன்னைத்தானே சீர்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய நேரத்தையு மிழந்து, அதிசீக்கிரத்தில் தேய்ந்து போகின்றது. பிறகு, நன்னிலைமையிலிருந்த தசை கெட்டுக் கொழுப்பு மூடி இருதயம் பலவீனப் படுவதல்லாமல், கொழுப்பின் பளுவையுந் தாங்க வேண்டி வருகிறது.

இவ்வித சீர்கேட்டை யடைந்த இருதயம்; ஆரோக்கியமுள்ள இருதயத்தைப் போல நோயைப் பொறுத்துக் கொள்ள முடியாது. வேலை செய்வதாலும் நோய் கொள்வதாலும் அதன் பலவீனத்தை யெளிதில் தெரிந்து கொள்ளலாம். ஒருவன் மதுசாரத்தை மட்டான அளவு உபயோகித்தாலும், அவனுடைய இருதயம், இன்புளியன்சா (Influenza) சத்திரப் பிரயோகம் (Surgical operation) தற்செயலாயுண்டாகும் இடையூறுகள் (accidents) முதலியவைகளாலுண்டாகும் பொறுக்கக் கூடாத துன்பங்களை யெதிர்ப்பதற்குச் சக்தியில்லாமற் போகிற தென்று டாக்டர்கள் நன்றாய்த் தெரிந்திருக்கின்றனர். இவ்வித சமயங்களில் நோயாளியின் உயிர் இருதயத்தின் வலுவைப் பொறுத்திருக்கின்றது. அன்றியும், இவ்வித நிலைமையிலேயே பலகாலும் பிராணபத்தும் நேரிடுகின்றது.

ஏனெனின், மதுசாரக்குடியே இருதயத்தில் அமிதமான நோயையுண்டாக்கி யிருக்கிறது.

மேற் சொன்ன காரணங்களால் மதுசாரத்தின் பயன் எப்போதும் இருதயத்திற்குக் கெடுதலேயாகு மென்பது நன்கு விளங்குகின்றது. தேகம் சாதாரணமாக நல்ல சுகத்தோடிருக்கும் போது, சிறிதளவு மதுசாரங் குடித்தால் அதன் பயன் தெரியாது. அப்போது தெரியாமற் போயினும் பின்னரேனும் அதன் பயன் வீண் போகாது. நோயுள்ள காலத்தில் குடித்தால் இருதயம் மெலிவடைகின்றது. அதனால் ஒவ்வொரு வருஷமும் ஆயிரக் கணக்கான மரணங்களுண்டாகின்றன. பலவீனப்பட்ட இருதயம் நுமோனியா வியாதியில் வேலை செய்வதில்லை.

மதுக்குடியர்கள், நுமோனியா வியாதியால் எப்படித் துன்பமடைந்தன ரென்பதை ஸர் உல்லியம் ஆஸ்லர் எம். டி. (Sir William Osler M.D.) என்பவர் பின்வருமாறு காட்டுகின்றனர்.

மதுவிலக்கிகளுள் 100 பேருக்கு இவ்வியாதிகண்டதில் 18 பேர் இறந்தனராம்.

மிதமான மதுபானிகளுள் 100 பேருக்கு இவ்வியாதி கண்டதில் 25 பேர் இறந்தனராம்.

அதிக மதுபானஞ் செய்பவருள் 100 பேருக்கு இவ்வியாதி கண்டதில் 52 பேர் இறந்தனராம்.

ஆகவே, மதுக்குடியன் பெரும்பான்மையும் நுமோனியா வியாதிக் குள்ளாகின்றான். மதுக்குடியன் பெரிதும் நுமோனியா வியாதியால் மரணத்திற் குள்ளாகின்றான்.

இருதயத்திற்கு அதிகவேலை கொடுப்பது கெடுதலேயாம்.

இருதயத்திற்கு அனாவசியமாக அதிக வேலை கொடுப்பது கேட்டுக்கே யிடமாகும். முக்கியமாய் இளைஞர்கள் இதனை விலக்க வேண்டும். மிக்க சிரமத்தோடு நெடுநேரம் பந்தாடல், காலடிப் பந்தாடல் (foot ball) நெடுநேரம்பைசிகிள் சவாரி செய்தல் (முக்கியமாய்ப் பூமியிலிருந்து மேட்டிற்குப் போதல்) முதலிய அப்பியாசங்களால் இருதயம் தன் இயற்கையளவிற்கு அதிகமாய்ப் பருத்து விடுகிறது. ஆதலால், சீக்கிரத்தில் களைப்புத் தீர்ந்துவிடக் கூடிய அப்பியாசமே செய்ய வேண்டும்.

சிகரெட்டு குடிப்பதால் இருதயம் கெடுகிறது.

ஒரு சிறுவன் சிகரெட் குடிப்பதால், அவன் பந்தய விளையாட்டில் தோற்றுப் போகிறான். ஏனெனின், அவனுடைய இருதயம் நன்னிலைமையிலில்லாமலும், ஒழுங்கீனமாயும், சில சமயம் அதிவிரைவாகவும், மற்றொருசமயம் மெதுவாகவும் அடிக்கிறது. இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் இரத்தவோட்டம் செவ்வனே நடை பெறுவதில்லை.

பூரணவலுவையும் தேகக்கட்டையும் விரும்பும் தேர்ச்சியுள்ள சிலம்பவித்தைக்காரர்கள் புகையிலையையும், மதுபானத்தையும் முற்றும் விலக்க வேண்டும். முக்கியமாக அவர்கள் வித்தை பயிலுங் காலத்தில் அவர்கள் தேர்ச்சி இருதயத்தின் வலுவையும் இலக்ஷணத்தையும் பொருத்திருக்கிறது.

மதுசாரம் இருதயத்தின் 1. ஒய்வையும் 2. ஆகாரத்தையும் 3. சீர்திருத்தத்தையும் கொள்ளை இடுகிறதென்று ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

சென்ற ஐந்து ஆண்டுகளில் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் மோட்டார் எமனால் உயிரிழந்தவர்களின் தொகை 1,44,876. காயமடைந்தவர்களின் தொகை பத்து லட்சக் கணக்கு.

***

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் நகரங்களில் இராக்காலங்களில் நடந்து செல்வோர் கையில் முன்னும் பின்னும் ஒளியுள்ள விளக்குகளை எடுத்துச் செல்ல வேண்டு மென்று நியூயார்க் சட்டசபையில் மசோதா கொண்டுவரப் போகிறார்களாம்.

***

நாட்டிலே யாவரும் கைகுலுக்கக் கூடாதென்று இத்தலி நாட்டு சாவாதிகாரியான முசலோனி கட்டளையிட்டிருக்கிறார். கைகுலுக்குவதில் அழகில்லை யென்றும் அது சுகாதாரத்திற்கும் பொருந்திய தல்ல வென்றும் அவர் கூறுகிறார்.

***

ருஷியாவில் பெரிய தலைவராக விளங்கிக் காலஞ் சென்ற லெனின் மூளையைச் சோதனை செய்து அவரது குணாதிசயங்களைப் பற்றி ஒரு ஜெர்மன் சாஸ்திரியார் விவரங்களை வெளியிட்டுள்ளார். மூளைச் சோதனைக்கு மூன்று ஆண்டுகள் பிடித்தாம்.

கண்ணப்ப நாயனார் சரிதை

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

(236-ம் பக்க முற்றொடர்ச்சி)

கலி வெண்பா.

மோனம் பயிலு முனிவர்களும் வானவரும்
ஏனையரும் ஆற்றரிய இப்பூசை—கானமரும்
வேடர் தலைவன் விருப்பொடு செய்தாங்கமர
காடனொடு நாணன் கடிதேகிப்—பீடுடைய
தங்கடலை வற்குத் தனிப்புதல்வன் செய்தியெலாந்
துங்கமுடனெடுத்துச் சொல்லுதலும்—அங்கதுகேட்
டப்பனுடனன்னை யலமந் தவன் குணத்தைத்
தப்பறவே போக்குதற்குத் தாமுணர்ந்து—துப்புமிகு
ஆவேசத்தாள் தேவ ராட்டியைக் கொண்டங்கணைந்து
தாவு முருச்செபித்துந் தங்களெண்ண—மேவாது
தெய்வப் பையித்தியங் கொண்டானெனவே தேம்பியவர்
கைதவமதாகுமென்று கைவிட்டார்—பொய்யாத
வேதகத்தால் வெற்றிரும்பு பொன்னாய் விளங்குதல் போல்
தீதகன்ற திண்ணனார் திங்களணி—நாதருள்
தங்கியதான் முன்னை வினையிரண்டுஞ் சார்மலமும்
பங்கமுறத் தாசர் தொண்டு பண்ணிவந்தார்—சங்கமறை
வல்லார் சிவகோசரியார் மனம்வருந்தி
அல்லார்களனே அநுசிதங்க ளெல்லாநீ
நீக்கியருளென் றழுது போந்து நிசியதனில்
தூக்க, மிகுந்து துயில் கனவில்—மீக்கொள்சடை
அத்தராணுகி யவன்செயலைக் கேட்டியென்று
சித்த மிகமகிழ்ந்து செப்புகின்றார்—உத்தமனும்
அன்னானறிவனைத்து நம்மையறியும் மறிவாம்
அன்னான் செயலனைத்து மப்படியே—இன்னுங்கேள்
அன்னான் வடிவனைத்து மென்பக்க லன்பினவே
அன்னான் நீ முன்னே யருச்சித்த—மென்மலரைப்

போக்குஞ் செருப்பினடிபோதமெனக் கன்றுரைத்த
மாக்குழவி வேளடியை மானுமால்—ஊக்கமுடன்
வாயா லுகுக்குமந்த மஞ்சனமா காயகங்கைத்
தூய புனலையொக்குந் தொண்டனவன்—மேயகுஞ்சி
சூடிவந்து சாத்துந் துகழிலாப் புஷ்பமண்டர்
நேடிப் புனையலங்கல் நேருமே—நாடியவன்
வெய்ய கனலிற் பதமாக வெந்ததென
ஐயமறப் பல்லா லதுக்கியே—கொய்யிலையால்
தைத்தகல்லை மீது படைத்த தகுமிறைச்சி
வித்தகராம் அந்தணர்கள் வேள்விதனிற்—றுத்தியஞ் செய்
தீயு மவியி லினிதா மெமக்குமுன்னே
மேய அன்பு கூர விளம்புஞ் சொல்—நேயமிக்க
மாமுனிவ ரோதுகின்ற மந்திரத்தி னல்லனவால்
சேமமுறு மன்னன் செயலனைத்து—நாமுனக்குக்
காட்டுவோம் நாளை யொளித்திருந்து காணுதிநீ
பூட்டு மனவிடும்பை போக்கெனவே—ஆட்டுடையார்
சொல்லி மறைந்தார் துயில்நீத்த வேதியனார்
எல்லையிலா ஆச்சரிய மெய்தி நொந்து—அல்லிரிய
ஆதவனுங் கீழ்பால் அடைதலுமே யந்தணனார்
சீதநதி மூழ்கித் தெளிவெய்தி—ஆதரவாய்ப்
போந்து நெருநலைப்போற் பூசை முடித்த பின்றை
சாந்தமொடு பின்கரந்து தங்கினார்—ஏய்ந்தமுகில்
என்ன நின்ற வில்லி யிருமூன்றாம் நாட்காலை
மன்னுமுனி போற்றவரு முன்னேகித்—துன்னுமடல்
வேட்டம் புரிந்து மிகுசுவைசே ரூனமுதும்
ஆட்டுபுனல் சென்னிதனி லம்மலரு—மீட்டமுடன்
வெவ்வேற தாயமைத்துக் கொண்டு விரைவாக
அவ்வேற்றர் பக்கல் அணையவந்தார்—பௌவமன்ன
மேனியார் முன்னர்பல வெய்யசகுனந்தோன்ற
ஆனவிவை புண்ணீர் அதுகாட்டுந்—தேனனைய
அத்தனுக் கங்கென்கொலடுத்ததென வந்தபொழு
துத்தமனார் அன்பை யுறுமுனிக்கு—வித்தகமாய்க்
காட்டத் தமதிரண்டு கண்ணிலொன்றிற் செங்குருதி
யீட்டமுற்றுச் சோர இருந்திட்டார்—கோட்டுசிலைக்
கையார் மிகுசேய்மை கண்டோடி வந்துதிரம்

கண்ணப்பநாயனர் சரிதை

மெய்யாகப் பாய விறற்றனுவும்—பொய்யியம்பா
வாயிலுள்ள மஞ்சனமுஞ் சிந்திடக்கொய் மாமலருந்
தூயசிகை நின்று சொரிந்திடவே—நேயமுள்ள
பத்தர் நிலத்திற் பதைத்து விழுந்தெழுந்து
மெத்து நெய்த்தோர் தன்னை விலக்கிடவும்—அத்தகைய
புண்ணீர் சுருங்காது போதாலும் பார்த்திதற்கு
எண்ணிப் புரிவதெது வென்றறியார்—மண்ணிலிது
ஆர்செய்தா ரென்றே யலமந்தார் வெய்துயிர்த்தார்
நேருந் திசையனைத்து நேடினர்—சீரிலகு
வில்லை யெடுத்தார் விறல்வாளி யுந்தெரிந்தார்
கொல்லைவனம் வாழுங் குறவர் கொலோ—புல்லியவித்
தீமை புரிந்தா ரெனச்சினந்து தேடியெங்கும்
தாமவரா ரென்றுமலைச் சாரலெலாம்—போமவர்தான்
காணு ரொருவரையுங் காட்டிலுள்ள பன்றிபுலி
ஒநாயிவைதீ துஞற்றினவோ—யானறியேன்
என்று காளத்திவரை யாவுந் திரிந்தோடித்
துன்றும் விலங்கினமுந் தோன்றுமற்—பொன்றவிலா
வேணியனர் பாலடைந்து மிக்கதுயர் மூழ்கியவர்
தாணுவே யீண்டுமக்குச் சார்ந்த தென்னோ—மாணிலியான்
என்செய்கே னிவ்விதநோ யெம்மருந்தாற் றீருமென்று
வன்குறவர் அம்புதைத்த புண்மாற்ற—இன்பொடிடும்
மூலிகையைத் தேடிப் பிழிந்துவிட முன்னையினுங்
காலு முதிரங் கதித்திடலுஞ்—சீலமுளார்
ஒன்றுந் தெரியாமல் ஊனுக்கூன் என்னுமுரை
நன்றென்று கண்டார் நயனமதைத்—துன்றும்பாற்
சால விடந்து தனிமுதலின் கண்ணிலப்ப
நீல விழியுதிரம் நின்றதனைத்—தாலமன்ன
காயத்தார் நோக்கிக் களிப்படைந்து வாகுகொட்டி
நேய மிகநகைத்து நின்றுடிச்—சேயெனவே
பாடித் துதித்துநிற்கும் பத்தர் நலம் ஐயரினனும்
நேடியுணர நினைந்தரனர்—மாடிலகு
மற்றையிடக் கண்ணின்றுஞ் சோரிவரச் செய்திடலுங்
கொற்றமிகு வேடர்குலக் கோமகனும்—அற்றதனைக்
கண்டினி நானஞ்சேல் மருந்து கையிற்கொண்டு நின்றேன்
உண்டொருகண் ணின்னுமதை யுற்றிடந்து—அண்டர்பிரான்

கண்ணில் அம்புவேனெனவே காதலித்துக் கண்ணிடந்தால்
திண்ணமதாய்ப் பார்வைதெரியாதெனவே—எண்ணியிடக்
காலை யிறைவரது கண்மருங்கி லூன்றியபின்
கோலனுற் கண்ணிடக்கக் குற்றுதலும்—ஆலமுண்ட
எந்தைபிரான் செங்கை இகலோடு கண்ணிடக்கும்
பந்தமறு மன்பர்கரம் பற்றிடமுன்—மைந்த அருங்
கண்ணப்ப நிற்கவென்று காயவெளி மீதுநின்று
எண்ணரிய வாக்கொன் றெழுந்ததுவே—திண்ணனெனும்
அன்பாருங் கண்ணிடந்து அப்புமமை யத்துமரன்
தன்கரத்தாற் பற்று சமயந்தனினும்—மன்புவியை
ஆக்கியளிக்கும் அயனரியும் அண்டர்களுந்
தேக்கு புட்ப மாரி செறித்திட்டார்—ஆக்கமிதின்
வேறுண்டோ ஒப்பில் விமலரருட் கண்ணில் வந்த
ஊறுகண்டு கண்ணிடந்த உத்தமரின்—கூறரிய
செங்கரத்தை யீசன் றிருக்கரத்தாற் பற்றியென்றுஞ்
சங்கையின்றி என்வலத்திற் றங்குதிநீ—துங்கமுடன்
என்று பணித்து மறைந்தார், இகல்வேடர்
தன்றலைவர் தாளிறைஞ்சு வாம்.

ஜெர்மனியில் ஒல் சிங்கனில் ஒரு தொழிற் சாலையில் லோகம் உருக்கும் பெரிய தொட்டி உடைந்து விட்டதால் வெள்ளையாக உருகிய லோக நீர் ஆறு போலப் பாய்ந்தது. அதில் அகப்பட்டு இருவர் சாம்பராயினர். 16-பேர் பெரிதும் காயமடைந்தனர். பலரைக் காணவில்லை. சிலர் உருகிப் போகும் லோக நீருக்குள் அமிழ்ந்து போயினர். உயிரிழந்தவர் மொத்தம் எழுவர்.

***

ஆமதாபாத்தில் கள்ள நாணயங்கள் வைத்திருந்த ஒரு மார்வாரியைப் போலீசார் பிடித்த பொழுது நாணயங்களை விழுங்கி விட்டு அவற்றைத் தேடுமாறு வாய்க்குள் கைவிட்டுச் சோதித்த போலீஸ்காரனின் விரல்களைக் கடித்து விட்டானும். மார்வாரிக்கு நாலு நாளாகப் பேதிக்குக் கொடுத்தும், நாணயம் வர வில்லையாம்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது.)

7-வது அத்தியாயம்.

இராஜ மாட்சி மலைக் கோட்டை.

நட்டாஜியும் இராமனும் கைதியாகிய அயூப்கானுடன் இராஜமாட்சிக் கோட்டையை யடைந்தபோது இரவாய்விட்டது. இராக்காலத்தில் அயலார் ஒருவரையும் கோட்டைக்குள் விடக்கூடாதென்பது கண்டிப்பான உத்தரவு. ஆகையால், கோட்டை வாசலில் காவலிருந்த சிப்பாய்கள் இவர்களை உள்ளே போகக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். நட்டாஜி, தான் தேசீய இயக்கத்தைச் சேர்ந்தவனென்றும், அயூப்கான் என்னும் துருக்கவீரனைச் சிறைப்பிடித்து வந்திருப்பதாகவும், முக்கியமான அவசரச்செய்தி யொன்றை கோட்டைத் தலைவனிடம் பேசவேண்டியிருப்பதாகவும், அந்தச்செய்தியை அடுத்தநாள் காலை வரையில் வைத்திருக்கமுடியாதென்றும் சொல்லி கோட்டைக்குள் போகவேண்டுமென்று வற்புறுத்தினான். ஆகவே, தீப்பந்தங்கள் கொண்டுவரப்பட்டன. தீவட்டி வெளிச்சத்தில் சிப்பாய்கள் இவர்களைச் சோதித்த பிறகு திருப்தி யடைந்தவர்களாய் உள்ளே விட்டார்கள். அச்சமயத்தில் சில சிப்பாய்கள் அவ்விடம் வந்தார்கள். அவர்களிடம், நட்டாஜி அயூப்கானை ஒப்புவித்துவிட்டு, தன்னைக் கோட்டைத்தலைவனிடம் அழைத்துக் கொண்டு போகும்படி அங்கிருந்த மற்றொரு வீரனைக் கேட்டான்.

"அவர் இப்பொழுது படுக்கைக்குச் சென்று விட்டார். இச்சமயத்தில் அவரை ஒருவரும் தொந்தரை செய்யக் கூடாது" என்றான் அவ் வீரன்.

"நான் பேசவேண்டிய செய்தி மிக முக்கியமானது. இப்பொழுதே அவரைப் பார்க்கவேண்டும்" என்று வற்புறுத்தினான் நட்டாஜி.

"அவரை இப்போது எழுப்பினால் மிகவும் கோபப்படுவார். அதென்ன அவ்வளவு முக்கிய சமாசாரம்? என்னிடம் சொன்னால், இச் செய்திக்காக அவரை எழுப்பலாமா கூடாதா என்று யோசித்து முக்கிய

மான சமாசாரமாக விருந்தால் அவரை யெழுப்புவேன்" என்றான் அந்த சிப்பாய்.

நட்டாஜி, "அவரிடத்தில் மட்டுந்தான் அதைச் சொல்லவேண்டும். நீ என்னை அவரிடம் அழைத்துக்கொண்டுபோ. இல்லாவிட்டால் நான் அவரைத் தேடிக்கொண்டு போகிறேன்" என்று கண்டிப்பாகப் பேசினான்.

கடைசியாக அந்தச்சிப்பாய் அரைமனதோடு நட்டாஜியை அழைத்துக்கொண்டு கோட்டைத்தலைவனுடைய மாளிகைக்குச் சென்றான். சிப்பாய் தெரிவித்ததுபோலவே, கோட்டைத்தலைவராகிய திரியம்பக ராவ் படுக்கையிலிருந்தார். அவரை எழுப்பியபோது அவர் மிகுந்த கோபத்துடன் சிப்பாய் மேல் எறிந்து விழுந்து, தன் தூக்கத்தைக் கலைத்ததற்காக அந்த சிப்பாயை அறையப்போனார். அப்போது நட்டாஜி அங்கு நிற்பதைப் பார்த்துவிட்டு, "யாரப்பா நீ? எங்கேயிருந்து வந்தாய்? இந்த இராக்காலத்தில் என்ன சமாசாரம் கொண்டுவந்தாய், சொல்" என்று அவசரமாகக் கேட்டார்.

நட்டாஜி, கோட்டையைப் பிடிக்க முகம்மதிய சேனை வந்துகொண்டிருக்கிற தென்றும், அச்சேனை கண்டாலா கிராமத்தருகில் தங்கியிருந்ததைத் தான் கண்டதாகவும், அநேகமாய் அடுத்த நாள் காலையில் சேனைகள் கோட்டையைத் தாக்குவார்களென்றும், ஆகையால், முன் சாக்கிரதையோடு ஆயத்தமாயிருக்க எச்சரிக்கை செய்யும் பொருட்டே தூக்கவேளையில் அவரைத் தொந்தரை செய்ய நேரிட்டதென்றும் தெரிவித்தான்.

பீஜப்பூர் சேனை கோட்டையைப் பிடிக்கவரும் செய்தியைக் கேட்டதும் திரியம்பகராவுக்குத் தூக்கமும் கோபமும் பறந்து போய்விட்டது. அவர் திடுக்கிட்டுப் போனார். அவர் இவ்விதம் பயப்படுவதற்குக் காரணம் என்னவென்றால் தற்சமயம் கோட்டையில் போதுமான வீரர்கள் இல்லை. மூன்று நாட்களுக்கு முன்புதான், கோட்டையிலிருந்த சிப்பாய்களை யெல்லாம் கல்யாணி நகரத்தைப் பிடிப்பதற்காகச் சிவாஜி அழைத்துக் கொண்டு போய் விட்டார். இப்பொழுது கோட்டைக்குள்ளிருக்கும் சிப்பாய்கள் மிகச் சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களே. அன்றியும், அக்கோட்டை இயற்கையரண் அமைந்ததாக விருந்தபோதிலும் சில விடங்களில் மதில் சுவர்கள் கிலமாயிருந்தன. போதுமான சிப்பாய்கள் கைவச மிருந்தபோது, திரியம்பக ராவ் அக்கிலமான சுவர்களைப் பழுதுபார்க்காமல் இருந்துவிட்டார். இக்காரணங்களால்

அவர் திகில் அடைந்தார். நல்ல சமயத்தில் செய்தி கொண்டுவந்ததற்காக அவர் நட்டாஜிக்கு வந்தனம் அளித்து, தற்போது எவ்வளவு பாதுகாப்புச் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யத் தொடங்கினார். அவர், கோட்டையிலுள்ள எல்லாச் சிப்பாய்களையும் உடனே வரும்படி அவசர உத்தரவு பிறப்பித்தார். சிப்பாய்கள் அனைவரும் வந்து சேர்ந்ததும் கோட்டைச்சுவர்களைப் பழுதுபார்க்கும்படியும் பீரங்கி, துப்பாக்கி முதலிய போர்க்கருவிகளை ஆயத்தப் படுத்தும்படியும் சிப்பாய்களுக்குக் கட்டளை யிட்டார். உடனே கோட்டை யெங்கும் பரபரப்பு காணப் பட்டது. அந்த இரவில் சிப்பாய்கள் துரிதமாகவும் சுறுசுறுப்பாகவும் தங்கள் தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் நட்டாஜி, தாதாஜி தங்கியிருக்கும் மாளிகைக்குச் சென்றான். தாதாஜி அவனை அன்புடன் வரவேற்று குடும்ப க்ஷேமங்களை விசாரிக்க ஆரம்பித்தார். நட்டாஜி, “குடும்ப க்ஷேமங்களைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். நம்முடைய க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டிய சமயமாகும். ஏற்கெனவே இரவு நெடுநேரமாய் விட்டது” என்று சொல்லுவதற்குள் தாதாஜி திடுக்கிட்டு “என்ன நீ சொல்வது ஒன்றுந் தெரியவில்லை. ஏதோ ஆபத்து வந்து விட்டது போல் பேசுகிறாயே” என்றார்.

“ஆண் பிள்ளைகளுக்கு ஆபத்தைப் பற்றிக் கவலையில்லை. பெண் பிள்ளைகளைப் பற்றித்தான் நாம் கவனிக்க வேண்டும்” என்றான் நட்டாஜி.

தாதாஜி :—“நீ சொல்லுவதைப் பார்த்தால் எனக்கு மேலும் மேலும் சந்தேகம் தோன்றுகிறது. சிப்பாய்களும் இன்றிரவு சுறுசுறுப்பாகப் போவதும் வருவதுமாக விருக்கிறார்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சீக்கிரம் சொல். முகம்மதியர் கோட்டையைச் சூழ்ந்து கொண்டார்களா? என்ன”

“மாமா, நீர் அவ்வளவு தூரம் கவலைப்பட வேண்டாம். முகம்மதிய சேனை இன்னும் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளவில்லை. ஆனால் நாளை காலையில் கட்டாயம் சூழ்ந்துகொள்வார்கள். வயது சென்ற நீங்களும் இளஞ் சிறுமியான காசிபாயும் சண்டை நடக்கும் போது இவ்விட மிருப்பது ஆபத்தாகும். ஆகையால் நீங்கள் உடனே புறப்பட்டுப் போக வேண்டும் என்று சொல்லவே நான் இங்கே வந்தேன்” என்றான் நட்டாஜி.

தாதாஜி:—"அப்படியா! பீஜப்பூர் சேனைகள் வருகிறார்களா? ஐயோ, கோட்டையிலிருந்த சேனைகள், நாலு நாளைக்கு முன்னே தான் கல்யாணி நகரத்துக்குச் சென்றார்கள். இந்த நிலைமையில் நாளை நடக்கும் சண்டையில் நமக்கு வெற்றி கிடைக்கும் என்று நினைக்க வழியில்லை. அதிருக்கட்டும். இப்போது இந்த இரவில் நான் எங்கே செல்வது? யாருடன் போவது?" என்று சொல்லி வருத்தத்தோடு சிந்தித்தார்.

நட்டாஜி:—"நீங்கள் அதற்காகக் கவலைப்படவேண்டாம். என்னிடம் உண்மையான ஆள் ஒருவனிருக்கிறான். அவனுக்கு இந்த வட்டாரத்திலுள்ள எல்லா இடங்களும் வழிகளும் நன்றாகத் தெரியும். நீங்கள் நம்பிக்கையுடன் அவனோடு போகலாம். அவன் பத்திரமாக நீங்கள் போகவேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய் சேர்ப்பான்" என்று சொல்லி இராமனைக் கூப்பிட்டு அவர்களோடு துணைபோகும்படி ஏற்பாடு செய்தான். பிறகு தாதாஜி புறப்பட ஆயத்தமானார். நட்டாஜி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினான். வீட்டை விட்டு வெளி வரும்போது இடையில் காசிபாய் எதிர்பட்டாள். காசிபாயும் நட்டாஜியும் எதிரெதிராகச் சந்தித்தார்கள். அழகான சிறுமியாயிருந்த அவள் இப்போது கட்டழகு வாய்ந்த கன்னிகையாயிருப்பதைக் கண்டு நட்டாஜி வியப்படைந்தான். தீரமுள்ள சிறுவனாயிருந்த நட்டாஜி இப்போது "மங்கையர் மனதைக் கவரும்" ஆண்மகனாகத் தன் முன் திடீரென்று தோன்றியதைக் கண்டு காசிபாய் ஆச்சரியமடைந்தாள். அந்த விநாடியில் மின்சார சக்திபோன்ற ஒரு புதிய உணர்ச்சி அவ்விருவர் மனதில் தோன்றியது.

"காசிபாய்! சௌக்கியமா?" என்றான் நட்டாஜி.

காசிபாய் சற்று நாணத்துடன், "வாருங்கள் வாருங்கள். உங்கள் தயவால் க்ஷேமந்தான். கங்காபாய் செய்தி ஏதாவது தெரிந்ததா?" என்று கேட்டாள்.

"இல்லை. ஒன்றுந் தெரியவில்லை. அவளுக்காக முகம்மதியரைப் பழிவாங்காமல் விடப்போகிறதில்லை" என்று சொல்லியபோது தாதாஜி அவனைக் கூப்பிடுங் குரல் கேட்டது.

"அப்பா கூப்பிடுகிறார். காசிபாய்! நான் போய் வருகிறேன்" என்று சொல்லி நடந்தான் நட்டாஜி. "போய்வாருங்கள்" என்று காசிபாய் சொல்லிக் கொண்டே தன் தந்தையிடம் சென்றாள். ஆனால், அவர்கள் ஒருவரை யொருவர் பிரிவதற்கு முன், மறுபடியும் ஒருமுறை அவர்கள் கண்கள் சந்தித்துக் கொண்டன.

நட்டாஜி வெளியே வந்தபோது தனக்குள் ஓர் புதிய உணர்ச்சி எற்பட்டிருப்பதைக் கண்டான். "இவளையன்றி வேறு ஒருவரையும் மணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் சென்ற இரண்டு நாழிகை கழிதது தாதாஜியும் காசிபாயும் இராமனுடன் குதிரையேறி கோட்டைவாசலைக் கடந்து வெளியே சென்றார்கள்.

* * * * *

அடுத்த நாள் காலையில் முகம்மதிய சேனைகள் கோட்டையை முற்றுகையிடப் போகிறபடியால் நாம் கோட்டையைப் பற்றிச் சிறிது அறிந்திருக்க வேண்டியது அவசியம். இராஜ மாட்சிக்கோட்டை கொங்கண தேசத்தில் மேற்குமலைத் தொடர்ச்சியின் மேல் அமைந்திருக்கிறது. இக்கோட்டைக்கு மேற்கிற் கொங்கண சமவெளியும் கிழக்கில் மலைகளும் சூழ்ந்துள்ளன. செங்குத்தான மலைப் பாறையின் மேல் இக் கோட்டை கட்டப்பட்டிருப்பதால் இயற்கையிலேயே இது அரண் அமைந்துள்ளது. பாறைகள் செங்குத்தாக இல்லாமல் சரிவாயுள்ள விடங்களில் மதிற் சுவர்கள் காணப்பட்டன. அந்தச் சுவர்கள் பதினேழு அடி உயரமும் எட்டு அடி கனமும் உடையவை. உள்ளிருந்து பகைவரைச் சுடுவதற்காக மதிற் சுவர்களில் துவாரங்கள் காணப் படுகின்றது. இப்போது கோட்டை மதில் மீது இருக்கும் மூன்று பீரங்கிகளும் துருப் பிடித்து மிகப் பழமையாகக் காணப் படுகின்றன. கீழுள்ள சமவெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இக்கோட்டை மலை மேல் மிகக் கம்பீரமாகக் காணப்படுவதால் இதற்கு "இர்ராஜ மாட்சி" என்று பெயரிடப் பட்டது. இந்த கோட்டை மதிலுக்குள் செல்வோமானால் இரண்டு உள் கோட்டைகள் காணப்படும். இவைகள் ஒன்றுக் கொன்று அரைமைல் தூரத்தில் கிழக்கு மேற்காக உள்ளன. மேற்கிலுள்ளதற்கு "மனோரஞ்சனம்" என்று பெயர். கிழக்கிலுள்ளது சற்று உயரமான விடத்தில் கட்டப் பட்டிருக்கிறது. இதற்கு ஸ்ரீவர்த்தனம் அல்லது திருவளர் குன்றம் என்று பெயர். வெளிக் கோட்டையைக் கடந்து எதிரிகள் உள்ளே வந்து விட்டால், கோட்டையில் உள்ளவர்கள் ஒளிந்து அடைக்கலம் புகுவதற்கு எற்றதாக இந்த இரண்டு உள் கோட்டைகளும் தகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

8-ம் அதிகாரம்.

உளைப் படையும் நோச்சி வீரரும்.

கோட்டைக்கு என்னென்ன பாதுகாப்புகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் அன்றிரவு திரியம்பகராவ் செய்து முடித்தார். மெல்ல மெல்

லப் பொழுது புலர்ந்தது. கோட்டைக்கு வெளியே ஒருவரும் காணப் படவில்லை. வரப்போகிற முகம்மதிய சேனை, கோட்டையில் உள்ளவர் சண்டைக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்று சந்தேகிக்காதபடி; சில ஆடு மாடுகள் கோட்டைக்கு வெளியே புல்மேயும்படி விடப்பட்டிருந்தன. துப்பாக்கியும் வில்லுமாக சிப்பாய்கள் கோட்டைக்குள் சண்டைக்கு ஆயத் தமாக விருக்கிறார்கள்.

கடைசியாக, எதிர் பார்த்தபடியே முகம்மதிய சேனை சாலை வழியே வந்தது. அந்தச் சேனையின் தலைவனாகிய அயூப்கான் சிறை பிடிக்கப் பட்டிருப்பதால் அந்தச் சேனையை, அடுத்தபடியுள்ள ஒரு தளகர்த்தன் நடத்திவந்தான். அவர்கள் அயூப்கான் வருவான் வருவான் என்று நெடு நேரம் எதிர்பார்த்தும் அவன் வராதபடியால், அவன் நேராக இராஜ மாட்சிக் கோட்டைக்குப் போயிருப்பா னென்றும் அங்குச் சென்றால் அவனைக் காணக் கூடுமென்றும் நினைத்து அவர்கள் கோட்டையை நோக்கி வந்தார்கள். ஆனால், அயூப்கான் சிறையாளியாக இருப்பது அவர்களுக் குத் தெரியாது.

முகம்மதியர்கள், கோட்டையில் சண்டைக்கு ஆயத்தமான குறிகள் காணப்படா திருப்பதைக் கண்டு, திடீரென்று தாக்கிச் சுலபமாகப் பிடித் துக் கொள்ளலா மென்று நினைத்து உற்சாகத்தோடு வந்தார்கள். அருகில்வந்து சேர்ந்தவுடன், சேனைத்தலைவன் "ஐம்பதுபேர் மதிலின் மேல் ஏறுங்கள்" என்று கட்டளை யிட்டான். உடனே ஐம்பது சிப்பாய்கள் ஏணிகளைத் தூக்கிக் கொண்டு கோட்டைமதிலை நோக்கி நடந்தார்கள். அவர்கள் கோட்டைக்குப் பத்துகஜ தூரத்தில் வருமட்டும் சும்மா யிருந்து அருகில் வந்தவுடனே திரியம்பகராவ் சுடும்படி உத்தரவு கொடுத்தார். உடனே கோட்டைக்குள்ளிருந்து துப்பாக்கிகள் வெடித்தன; அம்புகள் பறந்தன. பீஜப்பூர் வீரர்களில் பலருக்குக் காயம் பட்டும் சிலர் உயிர் நீங்கியும் கீழே விழுந்தார்கள். ஏனையோர் தப்பி ஓடுவதற்குமுன் இன் னும் ஒரு தரம் துப்பாக்கி வெடிகளும் அம்புகளும் பறந்து வந்து அநேகரைக் கொன்று வீழ்த்தின.

இப்போதுதான் முகம்மதியர், தாங்கள் நினைத்தது போல மகாராட் டிரர் தூங்கவில்லை யென்று அறிந்தார்கள். பிறகு முகம்மதியர், இறந் தும் காயம் பட்டும் விழுந்து கிடக்கும் சிப்பாய்களை அப்புறப் படுத்தும் வரையில் சண்டையை நிறுத்த வேண்டு மென்று கேட்டு மகாராட்டிரருக்கு ஒரு கொடியை யனுப்பினார்கள். அவர்கள் அப்படியே உத்தரவு

கொடுத்தார்கள். காயம் பட்ட வீரர்களை அப்புறப் படுத்திய பிறகு, சேனைத் தலைவன், பீரங்கி வீரர்களைத் தவிர மற்ற சிப்பாய்களை யெல் லாம் இளைப்பாரும்படி கட்டளை யிட்டான். பீரங்கிகளைக் கோட்டைச் சுவருக்கு எதிராகப் பொருத்தி மதிற் சுவரைத் தகர்த்துடைக்கும்படி பீரங்கி வீரர்களுக்கு உத்தரவு செய்தான். அவன் உத்தரவுப்படியே பீரங்கி வீரர், தங்கள் வேலையைத் துவக்கினார்கள். இரண்டொரு நாழி கைக்குள் பீரங்கி வெடிகள் கணீர் கணீரென்று வெடிக்கப்பட்டன. கோட்டையி லிருந்து மராட்டிய வீரர்கள் தங்களிடமுள்ள மூன்று பீரங்கி களைக் கொண்டு எதிர்த்தார்கள். ஆனால், மகாராட்டிரரின் பழைய பீரங்கிகள் புதிய பீஜப்பூர் பீரங்கிகளுடன் போராடமுடிய வில்லை. போதாக் குறைக்கு மூன்று பீரங்கிகளில் ஒன்று வெடித்து விட்டது. இந்த பீரங்கிப்போர் அன்று மத்தியானம் வரையில் நடை பெற்றது. கடைசியாக பீஜப்பூர் சிப்பாய்கள் கோட்டைமதிலை ஒருபுறம் தகர்த்து விட்டார்கள். போதுமான வரையில் மதிற்சுவர் தகர்ந்து விட்டதைக் கண்ட சேனைததலைவன், பீரங்கிப் போரை நிறுத்தும்படிச் சொல்லி இளைப்பாறிய சிப்பாய்களை வரும்படி கட்டளை யிட்டான். சற்று நேரத் தில், சிப்பாய்கள் வந்து அணிவகுத்து நின்றார்கள். அவர்கள் இடிந்த மதிலின் பக்கமாகச் சென்று மகாராட்டிரர்களைத் தாக்க வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப் பட்டது. உடனே சிப்பாய்கள் கோட்டையை நோக்கி நடந்தார்கள். இந்தக் காலாள் வீரர்களை முன் னின்று நடத்தியவன் ஒரு நீக்ரோவன். இவன் பீஜப்பூர் சேனையில் பேர்படைத்தவன். மற்றவீரர்களைவிட அதிக உயரமும் தேகக் கட்டும் பலமும் உடையவன். அவனுடைய கரிய உருவமும் விகாரமான முக மும் திரண்ட தோளும் அகன்ற மார்பும் அவனை ஒரு இராட்சதன் என்று நினைக்கும்படிச் செய்தன. அவன் கையிற் பிடித்திருந்த பட்டாக் கத்தி பயங்கரமாகப் பளபளவென்று மின்னிற்று. அவன் இடதுகையில், சாதாரண மனிதர் இரண்டுபேர் தூக்கும்படி அவ்வளவு கனமான கேட யத்தைப் பிடித்திருந்தான். வாள் போரில் இவனை மிஞ்சிய வீரன் இல்லை என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையே. இந்த வீரன் முகம்மதியசேனையை நடத்திக் கொண்டே மதிற்புறஞ் சென் றான்.

மதிற்புறத்தில் மகாராட்டிர சிப்பாய்கள் இவர்கள் வரவைப் பார்த்து நின்றார்கள். மகாராட்டிரவீரர்களுக்கு நட்டாஜியே தலைவனாக விருந் தான். பெருந்தொகையான முகம்மதிய சேனையையும் அச்சேனையை நடத்திவரும் நீக்ரோவனையும் சிறு தொகையினரான மகாராட்டிர சேனை

கள் கண்டபோது சற்றுப் பின்னடைந்தனர். "ஹா! இவன் மனிதன் அல்லன். உண்மையாகவே இவன் ஒரு இராக்ஷதன்" என்று நீக்ரோவனைப் பற்றிச் சிப்பாய்கள் பேசியதை நட்டாஜி கேட்டான். இந்த நிலைமையில் சிப்பாய்களை உற்சாகப் படுத்தித் தைரியங் கொடுக்காவிட்டால் நிலைமை ஆபத்தாக முடியும் என்று நட்டாஜிக்குத் தோன்றியது. உடனே அவன் வில்லில் ஒரு அம்பைத் தொடுத்து "இதோ பாருங்கள். அவன் இராக்ஷதனுமல்ல இராவணனுமல்ல; தம்மைப்போன்ற ஒரு மனிதனே" என்று சொல்லி நீக்ரோவன் காலில் குறிவைத்து அம்பை எய்தான். அவ்வம்பு அவன் காலின் தோலைக்கிழித்துச் சென்றது. காயம் பட்ட விடத்திலிருந்து செவ்விரத்தம் அருவிபோல் ஒழுகியது. நட்டாஜி, சிப்பாய்களுக்கு அதைச்சுட்டிக் கட்டி "அதோ பார்த்தீர்களா அவன் காலில் இரத்தம் வருகிறது. ஆகையால் அவன் நம்மைப்போன்ற மனிதனே. தைரியமாயிருங்கள்" என்று ஊக்கப்படுத்திவிட்டு, எதிர்வரும் நீக்ரோவனைச் சந்திப்பதற்காக முன் அணியில் போய் நின்றான். உடனே அவர்கள் தங்கள் கோழைத் தனத்திற்கு வெட்கமடைந்து, மீண்டும் உற்சாகமடைந்தவர்களாய் கத்தியுங் கேடயமும் அம்பும் வில்லுமாகப் பகைவரை எதிர்க்க ஆயத்தமாய் நின்றார்கள்.

நட்டாஜியின் அம்பினால் காலில் காயமடைந்த நீக்ரோவன் சினமும் ஆத்திரமும் அடைந்தான். அவன் முகமும் கண்களும் முன்னைவிட அதிக விகாரமாய்த் தோன்றின. அவன் கண்டபடி வைதுகொண்டே சிப்பாய்களை நடத்திக்கொண்டு உடைபட்ட மதிலையடைந்தான். இருதிறத்துப் படையாளிகளும் கைகலந்தனர். நீக்ரோவன் முதல் முதல் இரண்டு மகாராட்டிர சிப்பாய்களைத் தன் வாளினால் வெட்டி வீழ்த்தினான். இதற்குள் நட்டாஜி அங்கு வந்து அவனைத் தாக்கினான். முகம்மதியத்தலைவனுக்கும் மராட்டியத்தலைவனுக்கும் வாட்போர் மூண்டது. இதில் ஆச்சரியமென்ன வென்றால் இருதிறத்துச் சேனைகளும் கைகலந்து போர் செய்யவேண்டிய கடமையை மறந்து இரண்டு தலைவர்களும் வாள்போர் செய்வதை ஆச்சரியத்தோடு பார்த்தவண்ணம் நின்றுவிட்டார்கள். உண்மையிலே அந்த சண்டை மனிதனும் இராக்ஷதனும் போராடுவதுபோலவே தோன்றிற்று. நீக்ரோவன், தன்னை எதிர்த்த நட்டாஜிமேல் கண்டபடி வைது கொண்டே கத்தியை வீசினான்; நட்டாஜி இரண்டடி பின் சென்று தடுத்துகொண்டான். இவ்விதம், மூன்று தடவை நீக்ரோ வீசிய கத்தி வீச்சை நட்டாஜி சாமர்த்தியமாகத் தடுத்துக் கொண்டதைக்

கண்டு அவனுக்கு மிகுந்த கோபமுண்டாய்விட்டது. அவன் பூமியை உதைத்துக்கொண்டு கோபமாக வைது வாளை பரபரவென்று சுழற்றிய வண்ணம் நட்டாஜி மேல் சென்றான். சரியான சமயத்தை எதிர் பார்த்திருந்த நட்டாஜிக்கு இப்பொழுதுதான் தக்க சமயம் வாய்த்தது. அவன்,தன் கேடயத்தினால் தடுத்துக்கொண்டு தன்வாளை நீக்ரோவன்மேல் வீசினான். அந்தவீச்சு நீக்ரோவனுடைய விலாப்புறத்தில் பட்டு மிகுந்த காயம் உண்டானபிறகு அவனுக்கு சொல்லொணுகோபம் மூண்டது.கண்களில் கோபப்பொறி வீசின. அவன் தன் பெரிய வாளினால் நட்டாஜியைப் பலமாக எதிர்த்தான். நட்டாஜி ஒவ்வொரு தரமும் மிகச் சாமர்த்தியமாகத் தடுத்துக் கொண்டான். கடைசியாக நீக்ரோவன் இரத்தச் சேதத்தினால் மிகுந்த களைப்படைந்தான். அவன் கைகள் சோர்ந்தன. இச்சமயம் அறிந்து நட்டாஜி தன் வாளைக் கீழே போட்டு தன் இடுப்பில் செருகி யிருந்த குற்றுடைவாளை எடுத்து நீக்ரோவன் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் மார்பில் குத்தினான். குற்றுடைவாள் கைப்பிடிவரையில் நீக்ரோவன் மார்பில் இறங்கி விட்டது. அவன் மரம்போல் சாய்ந்து பேச்சின்றி செத்தான். உடனே மகாராட்டிர சிப்பாய்கள் சந்தோஷக் கூச்சலிட்டார்கள். தங்கள் தலைவன் வெற்றியடைந்த படியால் தைரியமும் உற்சாகமும் அடைந்து பீஜப்பூர் சேனை மேல் வீழ்ந்து தாக்கினார்கள். பீஜப்பூர் சேனைகள் எண்ணிக்கையில் அதிகமாக விருந்தும், எதிர்பாராதவிதமாய் தமது தலைவன் இறந்ததைக் கைவிட்டவர்களாய் மன முடைந்து பின்னடைந்தனர். மராட்டியர்கள் மேலும் மேலும் உற்சாகங் கொண்டு அச்சேனைகளை துரத்தியடித்தனர். கடைசியாக அன்று நடந்த சண்டையில் முகம்மதியர் வெற்றி பெறவில்லை. முகம்மதியர் பக்கம் நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்களும் மகாராட்டிரர் பக்கம் மூன்று அல்லது நாங்கு சிப்பாய்களும் உயிர் துறந்தார்கள். முகம்மதியரை ஓட்டுவதற்குக் காரணமாயிருந்த நட்டாஜியை திரியம்பகராவும் மராட்டிய சிப்பாய்களும் பலவாறு புகழ்ந்து கொண்டாடினார்கள்.

(தொடரும்)

இந்தியாவில் லங்காஷயர்த் துணி வியாபாரம் சாகக்கிடக்கிறது என்று ராபர்ட்சன் என்பார் லண்டன் டெயிலி டெஸ்பாச் பத்திரிகையில் எழுதுகிறார். அதற்குக் காரணம் மகாத்மா காந்தியின் கதர் இயக்கம் என்று அவர் சொல்லுகிறார்.

அஷ்டாவதானி

(ஒரு சிறுகதை)

(மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது)

[ஆங்கிலேயர் நமது நாட்டைக் கைப்பற்றுவதற்குமுன், 18-ம் நூற்றாண்டின் முற் பாதியில் மதுரையையாண்ட விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கன் (1704—1731) காலத்தில், ஷை அரசனுடைய ஏஜண்டுகளில் முதன்மையானவனும் நிலக்கோட்டைத் தாலுக்காவைச் சேர்ந்த ஒன்பதூர் என்றும் நவபுரி என்றும் சொல்லப்படும் பெஞ்சை நாட்டின் ஜமீந்தாருமாகிய கூளப்ப நாய்க்கன் மீது சுப்ரதீபக் கவிராயர் என்னும் புலவர் பெருமான் விறலிவிடுதூது என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். அது, 1836-ம் ஆண்டில் திருத்தணிகை விசாகப் பெருமாளையரால் அச்சிடப்பட்டது. இந்தநூலின் சிற்றின்ப அலங்காரங்கள் வெளிப்படையாகச் சொல்லி யிருப்பதனால், இதனை ஒருவரும் வெளியிடக் கூடாதென்று அரசாங்கத்தார் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்களாகையால் இப்புத்தகம் இப்போது கிடைப்பதருமை. இதில் சிற்றின்பம் வெளிப்படையாக வர்ணிக்கப்பட்டிருப்பது உண்மையே யென்றாலும், ஏனைய பெரும் பான்மையான பாகங்கள் சொல்லழகும் பொருளழகும் செய்யுளின் பழும் கதையின் போக்கும் மிகச் சிறந்து விளங்குகின்றன. ஆகவே நமது வாசகர்களும் இந்நூலின் அருமை பெருமைகளைப் படித்து ஆனந்திக்கும் பொருட்டு, வெளியிடக் கூடாத பாகங்களை மறைத்தும் கதைப் போக்கை விளக்கிச் சொல்ல வேண்டிய விடங்களில் விளக்கி வசனமாக எழுதியும் கூட்டியும் குறைத்தும் தொகுத்தும் வகுத்தும் "அஷ்டாவதானி" என்னும் பெயருடன் இங்கு எழுதப் படுகிறது.]

நான் 18-ம் நூற்றாண்டில் வசித்தவன். சீரங்கத்தில் பிறந்தேன். பிராமண குலத்தில் ஒரு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். என்னை என் பெற்றோர்கள் மிக்க செல்வமாகவே வளர்த்து வந்தார்கள். ஆம். பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகள் எவ்வளவு செல்வத்தோடு வளர்க்கப் படுவார்களோ அவ்வளவு செல்வமாக வளர்ந்தேன். "பிரபுக்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் படிப்பு பூச்சியமாச்சே. உனக்கும் படிப்பு பூச்சியந்தானே" என்று கேட்கிறீர்களோ? அப்படியில்லை. என் பெற்றோர் என்படிப்பு விஷயத்தில் அதிக கவனமாக விருந்தார்கள். நான் கல்வியை மிக நன்றாகக் கற்று வந்தேன். இளம்பிராயத்திலேயே, அதாவது பதின

ருவதுவயதில் இலக்கணம் இலக்கியம் முதலியவைகளில் தேர்ச்சி யடைந்ததோடு செம்பாக மாகச் செய்யுள் பாடவும் வல்லவனுனேன். இக் காலத்தில் தமிழ்ப் பண்டிதர்களுக்குக் கொடுக்கப்படும், பால பண்டிதர், பண்டிதர், மகா மகோபாத்தியாயர் முதலிய பட்டங்கள் அக்காலததுத் தமிழ்ப் பண்டிதர்களுக்குக் கிடையாது. அக்காலத்துப் பண்டிதர்கள், அரசர்களின் சபைகளிலோ அல்லது புலவர்களின் சபைகளிலோ சென்று தங்கள் கல்வித்திறத்தைக் காட்டி, அஷ்டாவதானி, சதாவதானி, கவிரா சர், நாவலர் முதலிய பட்டங்களைப் பெறுவது வழக்கம். அவ்விதமாகத் தான் நானும் "அஷ்டாவதானி" என்னும் பட்டத்தைப் புலவர்களால் சூட்டப் பட்டேன்.

வால சரஸ்வதி யென்வாக்கிற் ப்ரசன்னமதாய்
நாலு கவித்திறமும் நானறிந்து—"வேலும்
மயிலு" மெனச் சொன்ன வுரை மாறுமற் சொல்லக்
கயிலாட சிங்கி கழற்ற,—அயலொருவன்
சொன்ன வினச் சொல்ல, வெதிர் சூடாதப், பின்முதுகு
தன்னி லெறிந்த கல்லுத்தா னெண்ணப்—பன்னுசது
ரங்க விளையாட்டுக் கடிபார்க்கச், சொற் புலவோர்
தங்கள் கவியை யவதானிக்கச்,—சங்கத்தில்
எட்டெட் டெழுத்தாணிக் கேற்ற கவி சொல்லவும்
அஷ்டாவதானி யென்பதாயினேன்.

அன்று முதல் என் பெற்றோ ரெனக்கிட்ட பெயர் மறைந்து "அஷ்டாவதானி" என்னும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. படித்த வர்களுக்குச் சாதாரணமாக மரியாதை யுண்டென்றாலும், படிப்புடன் செல்வமும் இருந்தபடியால் எனக்கு மரியாதையும் கௌரவமும் அதிக மாக எற்பட்டது. கன்னிப் பெண்களைக் கண்ணெடுத்துப் பார்க்கும் வயது எனக்கு வாய்ந்ததை யறிந்து என் பெற்றோர் எனக்குத் திரும ணஞ் செய்ய முயற்சி செய்தார்கள். இதை யறிந்து பல பெற்றோர், எனது செல்வத்தையும் படிப்பையும் இளமையையும் கருதி தமது பெண் களை எனக்குக் கொடுக்க முன்வந்தார்கள். கடைசியாக, என்னைப் போலவே இளமையும் வனப்பும் வாய்ந்த ஒருகட்டழகியை நான் மணஞ் செய்து கொண்டேன். பண்டை நல்வினைப்பயனுல் செல்வமும் கல்வி யும் இளமையும் வனப்பும் ஒருங்கமையப் பெற்ற நான் இலக்குமி போன்ற என் இளைய மனைவியோடு இன்பந்துய்த்து இல்லறததை நல் லறமாக நடத்தி வந்தேன்.

நான் தினந்தோறும் கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுது வருவதுண்டு. செவ்வந்தீசர் சந்நிதிக்கு அடிக்கடி போய் வருவேன். நமது நாட்டில், தேவதாசிகள் இல்லாத கோயில் எது? அந்தோ; ! அந்த ஆபாசத்தை நினைத்தால் என் வயிறு எரிகிறது. ஏனென்றால், இத்தேவதாசிகளினால்தான் நான், கண்டோர் பரிகசிக்கவும் கேட்டோர் சிரிக்கவும் இந்த கதி அடைந்தேன். அந்தக்கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

நான் செல்வந்தீசரைத் தெரிசிக்கச் செல்லும் போதெல்லாம் அக் கோயில்தாசி யாகிய இன்பரசவல்லி எனக்குத்தெரிசனம் கொடுப்பதுண்டு. முதலில் அவள் தரிசனம் கூடாதென்று நீக்க முயன்றேன்; ஆனால் அதுதான் முடியவில்லை. கடைசியாக எனக்கும் அவளுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டுவிட்டது. அவள் திருச்சிராப்பள்ளியில் வசிப்பவள். அவள் காரணமாக நான் ஒருவருக்குந் தெரியாமல் சீரங்கத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போய் வருவேன். சில காலம் இப்படி நடந்தது.

“...
பங்கான வாழ்விற் பயிலுநான்—ஆங்குசெல்வந்
தீசர் திருச் சந்நிதியிலேந்திழையார் தம்மிலொரு
தாசிமேல் வைத்தேன் தயவுநான்—நேசமாய்
இந்தரங்கத்தே திரிந்தேன் இன்பரசவல்லியிடத்
தந்தரத்தே ளுசையால்—அந்தத்
திருச்சிராப்பள்ளிக்குச் செல்லா திருக்கத்
தரிச்சிராதென் மனது தானும்......”

ஒருநாள் அறியாச்சிறுவன் ஒருவனை துணைக்கழைத்துக் கொண்டு திருச்சிக்குச் சென்று வந்தேன். அச்சிறுவனை நல்லவன் என்று எண்ணி, என் செய்தியை ஒருவருக்கும் சொல்லாதே என்று எச்சரிக்கை செய்து வைத்தேன். ஆனால், அந்தோ! அந்தத் போக்கிரிப் பயல் என்னை வஞ்சித்து விட்டான்; என் செய்தியை வெளிப்படுத்தி விட்டான். அதுவும் யாரிடத்தில் சொல்லிவிட்டான் என்கிறீர்கள்? நேராக என் மனைவியிடம் போய் எல்லா வற்றையும் ஒன்று விடாமல் சொல்லி விட்டான்.

..............................ஒருத்தன்
அறியாச் சிறுவனுடன் யானொருநாள் அந்த
வெறியார் குழற் பரத்தை வீட்டிற்—பிரியமுடன்

சென்றிருந்து வந்தேன். திடுதிடென ஓடிப்போய்க்
குன்றிருந்த கொங்கைக் குலமனையாட்கு—உன்கணவர்

ஓடத்திலேறினர் உத்தரியம் போக்கடித்தார்
நாடிச் சிரகிரியை நண்ணினர்.—கூடவந்த

என்னைச் சவுக்கையில் வைத்து இன்பரசவல்லியெனும்
பொன்னனையாள் வீட்டுக்குட் போய் புகுந்தார்—அந்நேரம்

மிஞ்சிமிஞ்சிப் பேசினள் வேசிமகள் அதற்குள்
அஞ்சி யஞ்சிப் பேசினரையங்கார்—வஞ்சியந்த

வீட்டுக் கதவடைத்தாள். மெள்ள மெள்ளக் கொஞ்சினள்
காட்டுப் புறாவோசை காட்டினள்—வீட்டைவிட்டு

வந்தார் நம்மையர் என்னை வாவென்றார் காவிரியிற்
சந்திபண்ணி யிக்கரையிற் றண்டினர்—இந்தவூர்க்கு

என் மார்க்கஞ் சொல்லாதே யென்று சொன்ன ரென்றந்தத்
துன்மார்க்கப் பையல் எல்லாஞ் சொல்லி விட்டான்

இவ்விதம் நான் தாசிவீடு செல்வதை என்மனைவி அறிந்தவுடன் என்மீது கோபமும் ஆத்திரமும் விசனமும் அடைந்தாள். என்னைப் பகையாளியைப்போல் பாரத்தாள். மனைவிமார், தங்கள் கணவர் செய்யும் எத்தகைய குற்றங்களையும் பொறுத்துக்கொள்வார்கள். ஆனல், தமது கணவன் வேறொருவளை விரும்பி நிற்கிறான் என்று தெரிந்தால் அவர்கள் அக்குற்றத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். இது பெண்களின் இயற்கைதானே. ஆகவே என் மனைவியும் என்னை வெறுத்தாள்.

....மன்மனம்

தொடுத்தாள், கடுகடுத்தாள், தூங்குமஞ்சம்விட்டுப்
படுத்தாள், பகைஞரை போற் பார்த்தாள்—அடுத்தடுத்து

வேண்டினேன். " குட்டுவெளியாக்குவேனென்னைத்
தீண்டாதே " யென்றாள். "சிறுப்பளியில்,—ஆண்டவன்பாற்

செல்லா " யென்றாள். " பரத்தை தேடுவாளே " யென்றாள்.
சொல்லாதவார்த்தை சில சொல்லினள்—இல்லாள்

வலிகிடந்தமாற்ற முரைக்குமே லவ்வில்
புவிகிடந்ததூறாய் விடுமென்று—உலகறியச்

செப்பினளவ்வை யென்ற தேர்ந்தேன்......

இவ்விதம் மனையாள் பகையுடன் நான் எத்தனை நாளிருப்பது? ஊரைவிட்டுச் சென்று கோயில் குளங்களைத் தரிசித்து அவ்வவ்வூரிலுள்ள அதிசயங்களைப் பார்த்து விட்டு வரலாம் என்று எண்ணங் கொண்டேன். தேச சஞ்சாரம் செய்து சில மாதங்கள் கழித்து வந்தால் அதற்குள் என் மனைவியின் கோபந் தணிந்து விடும் என்பது என்கருத்து. ஆகவே நான், ஒருநாள் இரவு என்கைக் கெட்டிய பணத்தையும் பொருளையும் மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டேன்.

அக்காலத்தில் இருப்புப் பாதைகளும், மோட்டார் வண்டிகளும், நீராவிக் கப்பல்களும் கிடையா. இவை இருந்திருக்குமானல், என்னிடத்திலிருந்த பணத்தைக் கொண்டு இவ்வுலகத்தையே ஒரு சுற்றுப் பிரயாணம் செய்திருப்பேன். கால் நடையாகவும் மாட்டு வண்டிகள் கள் மூலமாகவும் பிரயாணம் செய்யவேண்டி யிருந்தபடியால் தமிழ் நாட்டிலுள்ள க்ஷேத்திரங்களுக்கு மாத்திரம் யாத்திரை செய்தேன்.

வெள்ளை நாவல் பழுக்கு மிக்க பதியும், நரிகள்
துள்ளுபரியான தொரு தொன்னகரும்,—தெள்ளுதமிழ்

செப்பக் கதவுதிறந்த வூருங் கருங்கல்
கப்பலென வந்த கடற்பதியும்—இப்புறத்தில்

பாங்குடைய வாண்டு பனிரண்டுக்கோர் கான்மா
மாங்கனீர் பொங்கும் வளப்பதியும்—பூங்குடத்தில்

அங்கத்தை மங்கை வடிவாக்கின வூருந் தமிழ்க்குத்
தங்கத்தை யீந்த தனியூரும்—செங்கருங்கட்

காகமெரியக் கனல் வீசு மாமலையும்
யோகங் கழுகு செய்யு மொண்கிரியும்—வேகமிக்க

கான் ருண்டு வெம்முதலை கௌவியுண்ட பிள்ளைதனை
மூன்ருண்டு சென்றழைத்த மூதூரும்—மான்ருனேர்

தாசிக் கெழுந்த தனத்தை லிங்கமென் ெருருவன்
பூசித்துப் பேறுபெற்ற பொன்னகரும்—நேசித்து

மைந்தனுடலறிந்து மாதவத்தோர்க்கிட்டுவினைப்
பந்தமரிந்தோன் பழம்பதியும்—சொந்தமாம்

ஆட்டைப்புலிகாக்கு மம்பலமும் நாலுவசி
நாட்டி நடுக்குதிக்கு நன்னகரும்—காட்டெயினன்

கண்ணைப்பரி கொடுத்தகற்பதியும் வண்ணன்றன்
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும்—மண்ணுலகில்

தீண்டாதாரெச்சில் செழுமறையோர்க்கீந்தாலும்
வேண்டாமெனுதேற்கு மெய்ப்பதியும்—மாண்டவர்தங்

காதிலுபதேசங் கடவுள் சொல்லும் பதியும்,
சீதரன்மாயாபுரியுஞ் சேவித்து—நாதிக்குஞ்

சங்கமுகந் தங்கெறிதாங்கமுக கங்கையுடன்
சங்கமுகதீர்த்தமெல்லாந் தானடி—அங்கிருந்து

கங்குல்பகலாக்கடலோட்டக் கப்பலிலோர்
திங்களில்வந்தெய்தினேன் சேதுவினில்—மங்காத்

தனுக்கோடி தர்ப்பசயனம் பணிந்து
மனுக்கோடி சூழ் செந்தூர் வந்தேன்—கனத்த

திருப்பதிக ளொன்பது நான் சேவித்தங்குள்ள
அருட் பொலியுந் தீர்த்த மெல்லாமாடித்—தருப்பொலியும்

குற்றால நெல்வேலி கோதை வில்லி புத்தூர் வந்து
உற்றேன் திருச்சுழிகை யூர்பணிந்தேன்—நெற்றிவிழித்

தம்பிரான் பூவணத்தைச் சந்தித்தேன் சங்கேந்தும்
எம்பிரான் சோலைமலைக் கெய்தினேன்—பைம்பொற்

றலையருவியாடி யெங்கள் சங்கத்தழகர்
மலரடியைப் போற்றி மகிழ்ந்தேன்.........

(தொடரும்)

இத்தலி இளவரசரை முசலோனி அமதித்துப் பேசியதற்காக அரசரின் மருமகனுக்கும் மந்திரி முசலோனிக்கும் சமீபததில் கத்திச் சண்டை நடந்ததென்றும் அதனல் முசலோனி சிறிது காயமடைந் திருக்கிறாரென்றும் ஒரு செய்தி வெளியாயிருக்கிறது.

* * *

லாகூரை அடுத்த ரவி நதியில் ஒரு பீரங்கி மோட்டாரும் ஒரு கட்டை வண்டியும் மோதிக் கொண்டதின் பயனக மோட்டார் பள்ளத்தில் விழுந்து விட்டது. லெப்டனண்டு லோகன் என்னும் ராணுவ உத்தியோகஸ்தர் உயிரிழந்தார். வயது 22. வேறு நால்வர் காயமடைந்தனர்.

கணித விநோதம்

(ஸ்ரீரங்கம் T. R. ஸ்ரீனிவாசன் B.A., எழுதியது)

(256-ம் பக்கத் தொடர்ச்சி)

3. எனது புத்திரர் பத்துப் பேருக்கும் நான் முதலாமவனுக்கு ரூ. 1, இரண்டாமவனுக்கு ரூ. 2, மூன்றாமவனுக்கு ரூ. 3......பத்தாமவனுக்கு ரூ. 10 இவ்வாறு அளித்து அவர்களனைவரும் ததசம் தொகைக்கு ஒரே விலையுள்ள சாமான்களை வாங்கி ஒரே விலைக்கு விற்பனை செய்து சற்றும் ஏற்றத்தாழ்வில்லாத தொகையுள்ளவராய்த் திரும்பவேண்டும் என்ற நியதியோடும் ஒரு தினம் அவர்களை சந்தைக்கு அனுப்பிவைத்தேன். இஃது அவர்களால் எவ்விதம் செய்ய இயலும் ?

4. ஒரு நள்ளிரவில் ஒரு செல்வந்தன் வீட்டில் எழு திருடர்கள் புகுந்து கொள்ளையிட முயற்சித்தனர். ஆனால் வீட்டிலுள்ளார் சீக்கிரமே விழித்துக்கொண்டதன் காரணமாய் அவர்கள் பிரிந்து ஓடிப்போக நேரிட்டது. ஆனால், அவர்களுள் ஒருவன்மட்டும் விலையுயர்ந்த முத்துஹாரம் ஒன்றை எவ்வாறோ எடுத்துவிட முடிந்தது. அவன் அதைத் தன் கூட்டாளிகள் எவரும் அறியாவிதம் பத்திரப்படுத்திக் கொண்டு தனியே ஓரிடம் சென்று நிம்மதியாய் உட்கார்ந்து அதிலுள்ள முத்துக்களை எண்ணிக் கொண்டேயிருக்கையில் அகஸ்மாத்தாய் அவனுடைய நண்பருள் ஒருவன் அங்கு வந்துசேர்ந்து தனக்கும் அதில் சரிபாதி பாகம் உண்டென்றான். அவ்வாறே அவர்கள் அதைத்தம்முள்ளே பிரித்துக்கொள்ளத் தொடங்கி எண்ணிப்பார்க்கும்பொழுது ஒரு முத்து மீதம் வந்தது. அதை எவர் அடைவதென்று அவரிருவரும் ஆலோசித்துக்கொண்டிருக்கையில் மூன்றாவது திருடன் வந்து சேர்ந்து அம்மாலையை மூவரும் சமமாகப்பகிர்ந்து கொள்ளவேண்டுமென வற்புறுத்தினான். இத்தடவையும் முன்போலவே ஒரு முத்து மீந்து நின்றது. சற்று நேரத்திற்கு ஒருவராய் எழுவரும் ஒன்று சேரவேதான் அந்த ஆரத்தை ;அவர்கள் சமமாகப்பங்கிட்டுக் கொள்ள முடிந்தது. அவ்வாறானால் அந்த மாலையில் இருந்த முத்துக்களின் எண்ணிக்கை யாது ?

தொடரும்.

210375
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40 0 0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50 0 0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)		ரூ. 8 0 0
அரைப்பக்கம்	ஷை	ரூ. 4 0 0
கால்பக்கம்	ஷை	ரூ. 2 8 0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈஸி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை, முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலியவற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வளரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகித்து குணமடையச் செய்த சிறந்த சிரோரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ காலரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினுல் அம் மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக்கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந்தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுகமான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதர்ர், பாணும்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பர்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:—மேசர்ஸ். தாதா அண்டு கோ.,

சைனுபஜார் ரோட், மதருஸ்

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும் ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், மூலைப் பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப், பல ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா **3—4—0.**

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனாமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல் ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மேடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதறாஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது ? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள் !

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணு 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதறாஸ்.

ஹாமுனியோஹா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம் வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள் !

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : :: காசி

HALF-TONE BLOCKS.

Copper 8 as. Square inch.
Zinc 6 as. Square inch.

LINE BLOCKES.

Copper 10 as. Square inch.
Zinc 4 as. Square inch.

Special Drawings if any will be charged. Charges for extra. Enlargement of photos and oil paintings On enquiry.

2 Months Only

INNER 15"×12" Rs 7-8 OUTTER 20"×16"
SIZE.

Send Your Photos for Bromide

Enlargements Highly Finished as Life Like

PRINCE STUDIO
ARTISTIC PHOTOGRAPHERS
HALFTONE BLOCK MAKERS.
30. W. RD. MOUNT ROAD. MADRAS.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்டரி

பாட்டரி யூனிவெர்ஸல்

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவெர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

...ட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட் ரோட், சென்னை.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர். பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹ்ராஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.
3-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு ஜரிகையினுல், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக தலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள் ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருது வாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைச் கொடி (Lacha) முதலி யவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.

EXPORT DEPARTMENT

ost Box 99,

ow room 287, Esplanade,

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளூ, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப் பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, . . . MADRAS.

Show room : 287, Esplanade. *Phone : No. 2693.*

M... and Published by K. S. Sunda...